بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ     نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ     وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian Tamil

தொகுதி 11

இதழ் 26

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரீ கமரீ 1448 - முஹர்ரம் - 09
ஹிஜ்ரீ ஷம்ஸி 1405 - இஹ்ஸான் 25 ★ 25 ஜீன் 2026


## அல்லாஹ்வின் கட்டளை

تِلۡكَ اٰيٰتُ اللّٰهِ نَتۡلُوۡهَا عَلَيۡكَ بِالۡحَقِّ ۚ فَبِاَىِّ حَدِيۡثٍۢ بَعۡدَ اللّٰهِ وَاٰيٰتِهٖ يُؤۡمِنُوۡنَ

அல்லாஹ்வின் இந்த அடையாளங்களை, நாம் உமக்கு முற்றிலும் உண்மையுடன் ஓதிக் காட்டுகிறோம், இவ்வாறிருக்க அல்லாஹ்வுக்கும் அவனது அடையாளங்களுக்கும் பின்னர் (அதாவது அவனது வார்த்தையையும், அடையாளங்களையும் மறுத்ததன் பின்னர்) அவர்கள் எந்தச் செய்தியை நம்புவர்.

(அல் ஜாஸியா: 07)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

---

**நபிமொழி**

## வழக்குகளில் தீர்ப்பு வழங்குவதற்கான தெளிவான செயல் திட்டம்

أَنَّ رَسُوۡلَ اللّٰهِ ﷺ لَمَّا أَرَادَ أَنۡ يَبۡعَثَ مُعَاذًا إِلَى الۡيَمَنِ قَالَ كَيۡفَ تَقۡضِيۡ إِذَا عَرَضَ لَكَ قَضَاءٌ۔ قَالَ أَقۡضِيۡ بِكِتَابِ اللّٰهِ قَالَ فَإِنۡ لَمۡ تَجِدۡ فِيۡ كِتَابِ اللّٰهِ قَالَ فَبِسُنَّةِ رَسُوۡلِ اللّٰهِ ﷺ قَالَ فَإِنۡ لَمۡ تَجِدۡ فِيۡ سُنَّةِ رَسُوۡلِ اللّٰهِ قَالَ أَجۡتَهِدُ بِرَأۡيِيۡ وَلَا اٰلُوۡ فَضَرَبَ رَسُوۡلُ اللّٰهِ ﷺ صَدۡرَهٗ فَقَالَ الۡحَمۡدُ لِلّٰهِ الَّذِيۡ وَفَّقَ رَسُوۡلَ رَسُوۡلِ اللّٰهِ ﷺ لِمَا يَرۡضٰى رَسُوۡلُ اللّٰهِ۔

(ابوداؤد کتاب القضاء باب اجتہاد الرائ فی القضاء)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்களை ஏமனிற்கு அனுப்புவதற்கு திட்டமிட்டிருந்தார்கள். அப்போது, உங்களுக்கு முன்னால் ஏதேனும் வழக்கு வந்தால், நீங்கள் எப்படி தீர்ப்பளிப்பீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு, அல்லாஹ்வின் வேத்தின்படி என்று அன்னார் கூறினார்கள். அல்லாஹ்வின் வேதத்தில் உங்களுக்கு கிடைக்கவில்லை என்றால் (என்ன செய்வீர்கள்)? என்று இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அப்போது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் சுன்னத்தின்படி என்று அன்னார் கூறினார்கள். அல்லாஹ்வின் தூதரின் சுன்னத்திலும் உங்களுக்கு கிடைக்கவில்லை என்றால் (என்ன செய்வீர்கள்) ? என்று இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு, அப்போது நான் இஜ்திஹாத் (எனும் சுயமே பகுப்பாய்வு) செய்வேன்; அதில் எந்தக் குறையும் வைக்க மாட்டேன் என்று அன்னார் கூறினார்கள்.

இதைக் கேட்ட அல்லாஹ்வின் தூதர் (ஸல்), அன்னாருடைய மார்பில் தட்டிக் கொடுத்து, ‘அல்லாஹ்வின் தூதரின் தூதுவருக்கு, அல்லாஹ்வின் தூதர் விரும்பியதைச் செய்யும் நற்பேறு அளித்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்‘ என்று கூறினார்கள். ❁ ❁ ❁

---

**வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பொன்மொழிகள்**

## அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பார்வையில் திருக்குர்ஆன் சுன்னத் மற்றும் ஹதீஸின் அந்தஸ்து

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

‘ நேர்வழியை தெளிவுப்படுத்துவதற்காக, நான் இந்தக் கருத்தை எழுதியுள்ளேன்: முஸ்yபம்களின் கைகளில் இஸ்லாமிய கட்டளைகளை நிறுவுவதற்கு மூன்று விஷயங்கள் உள்ளன: (1) அல்லாஹ்வின் வேதமான திருக்குர்ஆன் ஆகும். இதை விடச் சிறந்த உறுதியான மற்றும் நம்பிக்கையான நூல் எதுவும் நமது கரங்களில் இல்லை. மேலும், அது சந்தேகம் மற்றும் ஐயப்பாடுகள் எனும் அசுத்தத்திலிyருந்து தூய்மையானதாகும். (2) இரண்டாவது சுன்னத்- இந்த இடத்தில் நாம் அஹ்லே ஹதீஸ்‘ கூட்டத்தினரின் சொல் வழக்கிலிருந்து விலகி நின்று பேசுகிறோம். அதாவது, நாம் சம்பிரதாயமான ஹதீஸ் கலை அறிஞர்களின் வழிமுறையைப் போன்று ஹதீஸ் மற்றும் சுன்னத் ஆகியவற்றை ஒன்றாகக் கருதுவதில்லை. மாறாக, ஹதீஸ் என்பது வேறு விஷயமாகும்; சுன்னத் என்பது வேறு விஷயமாகும். சுன்னத் பற்றி நமது கருத்து என்னவென்றால், அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் செயல் நடைமுறை மட்டுமேயாகும். அது தன்னகத்தே தொடர்ச்சியை கொண்டுள்ளது. மேலும் தொடக்கம் முதலே அது திருக்குர்ஆனுடனேயே வெளிப்பட்டது. மேலும் எப்போதும் அதனுடனேயே இருக்கும். அல்லது வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், திருக்குர்ஆன் வல்ல இறைவனின் கூற்றாகும். மேலும் சுன்னத் என்பதோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் செயல். மேலும் தொன்றுதொட்டே அல்லாஹ்வின் வழக்கம் என்னவென்றால், நபிமார்கள் (அலைஹிஸ்ஸலாம்) இறைவனின் கூற்றை மக்களின் நேர்வழிக்காக கொண்டு வரும்போது, அந்தக் கூற்றை மக்கள் புரிந்துகொள்வதில் எந்தக்

இதன் தொடர்ச்சி 9- ம் பக்கம்..

---

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் மேற்கோள்**

### இறைத் தூதர் (ஸல்) அவர்களின் சுன்னத் என்பது அன்னார் (ஸல்) எதனை நிறுவினார்களோ மேலும் எதனைப் பின்பற்றுமாறு அன்னார் (ஸல்) மற்றவர்களையும் ஊக்கப்படுத்தினார்களோ அதுவே ஆகும். ஹதீஸ் என்பது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எடுத்துரைத்த கூற்றாகும்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி (அலை) அவர்களின் அறிவார்ந்த சாதனைகளை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பத்தாவது பணி என்னவென்றால், அவர்கள் மார்க்க (ஃபிக்ஹ்) சட்ட விவகாரங்களை சீர்படுத்தினார்கள். அதில் கடுமையான சீர்கேடுகள் ஏற்பட்டிருந்தன. அதில் கருத்து வேறுபாடுகள் எந்த அளவிற்கு ஏற்பட்டிருந்தன என்றால், அதற்கு எல்லையே இல்லாமல் இருந்தது.

அன்னார் (ஸல்) அது தொடர்பாக பொன்னான விதிமுறைகளை வகுத்தார்கள். மேலும், கீழ்க் கண்ட விஷயங்களின் மீது ஷரீஅத்தின் அடித்தளம் அமைந்துள்ளது என்று கூறினார்கள். (1)

இதன் தொடர்ச்சி 9- ம் பக்கம்..

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰه

**தலையங்கம்**

## அஹ்லே குர்ஆன் மற்றும் அஹ்லே ஹதீஸ் பிரிவினருக்கிடையிலான கருத்துவேறுபாடுகளும்

## நீதி நெறி தீர்ப்பவரான ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடைய ஈமானை வலுவூட்டக் கூடிய தீர்ப்பும்

இன்றைய நாட்களில் சவூதி அரேபியா சட்டம் இயற்றுதல் தொடர்பாக 'முத்தவாதிர்' ஹதீஸ்களைத் தவிர மற்ற அனைத்து ஹதீஸ்களின்படி அமல் செய்வதை சந்தேகத்திற்குரியதாகக் கருதியவாறு சவூதி அரேபியா அதனை நிராகரித்துவிட்டது என்ற செய்திகள் சமூக ஊடகங்களில் மிக அழுத்தமாக பரவி வருகின்றன. சில முஸ்லிம் முல்லாக்கள் அல்லது சமூக ஊடகங்களில் இருக்கும் அவர்களின் அடிவருடிகள், முஸ்லிம் பொது மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டுவதற்காகவும், மலிவான விளம்பரத்தைப் பெறுவதற்காகவும் இதுபோன்ற செய்திகளைப் பரப்பி வருகின்றனர். மேலும் அதில் முக்கியப் பங்காற்றுகின்றனர்.

உண்மை என்னவென்றால், சில ஆண்டுகளுக்கு முன்பு சவூதி அரசாங்கம் தனது பொருளாதார மற்றும் சமூக நிலையை மேம்படுத்துவதற்காக 'விஷன் 2030' என்ற திட்டத்தை வகுத்திருந்தது. எண்ணெய் வருமானம் மட்டுமின்றி வேறு என்னென்ன வழிமுறைகள் இருக்கின்றனவோ அவற்றில் தனது பொருளாதாரத்தை வலிமையான முறையில் நிலைநிறுத்த வேண்டும் என்பது அதன் அசலல் நோக்கமாக இருந்தது. அவற்றில் சுற்றுலா, தொழில்நுட்பத்தில் முதலீடுகளை அதிகரித்தல், புதிய நகரங்களின் கட்டமைப்பு மற்றும் பொழுதுபோக்கு மையங்களை உருவாக்குதல், பெண்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் அவர்களின் சுதந்திரத்திற்கான நடவடிக்கை போன்றவை அடங்கும். அவற்றில் சில மார்க்கச் சீர்திருத்தங்களும் இருக்கின்றன. அவற்றில் ஒன்று இதுவாகும். அதாவது, சட்டம் இயற்றுவதில் திருக்குர்ஆனுடன் முதவாதிர் ஹதீஸ்களிலிருந்து உதவி பெற வேண்டும்; மேலும் அஹாத் ஹதீஸ்கள் மற்றும் ஹதீஸே கபர் போன்ற ஹதீஸ்களுக்கு அதைவிடக் குறைந்த அந்தஸ்தில் இடம் அளிப்பதுமாகும்.

சவூதி அரேபிய அரசாங்கம் இது குறித்து என்ன அறிவித்துள்ளது? மேலும் எந்தவொரு விஷயத்தையும் பரப்பி மலிவான விளம்பரத்தைத் தேடக் கூடிய முல்லாக்கள் இது தொடர்பாக என்ன கூறுகின்றனர்? என இந்த அனைத்து விஷயங்களையும் விட்டு விட்டு, இப்பிரச்சினை தொடர்பாக காலத்தின் இமாம் ஸய்யிதுனா ஹஸ்ரத் மிர்ஸா அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்கள் திருக்குர்ஆன், சுன்னத் மற்றும் ஹதீஸ்களின் மூலமாக வழிகாட்டுதல்கள் பெறுவது தொடர்பாக என்ன வழிகாட்டல் வழங்கியுள்ளார்கள்? என்று நாம் பார்ப்போம்!

உம்மத் எங்கெங்கெல்லாம் இடறலைச் சந்திக்கிறதோ அல்லது எங்கெங்கெல்லாம் வழிகாட்டுதலுக்கான தேவை உணரப்படுகிறதோ, அங்கு அன்னார் (அலை) அல்லாஹ்வின் அனுமதியுடன் வழிகாட்டியுள்ளார்கள்.

அன்னாரின் வாழ்நாளிலேயே 'அஹ்லே குர்ஆன்' என்ற பிரிவு உருவாகியிருந்தது. அந்த நாட்களில் அப்துல்லாஹ் சக்கால்வி ஸாஹிப் மற்றும் குலாம் அஹ்மத் பர்வேஸி ஸாஹிப் ஆகியோர் அதன் நிறுவனர்களாக இருந்தனர். இவர்கள் ஹதீஸ் ஆலிம்களுடன் ஒவ்வொரு நாளும் மார்க்க விவாதங்களில் ஈடுபட்டு வந்தனர். அந்த மார்க்க விவாதங்களில் ஒரு மார்க்க விவாதம் அப்துல்லாஹ் சக்கால்வி ஸாஹிப் மற்றும் முஹம்மது ஹுஸைன் பட்டாலவி ஸாஹிப் ஆகியோருக்கு இடையே 1902-ல் நடைபெற்றது. அப்துல்லாஹ் ஸாஹிப் அஹ்லே குர்ஆனாக இருந்தார். முஹம்மது ஹுஸைன் பட்டாலவி ஸாஹிப் அஹ்லே ஹதீஸ் பிரிவைச் சார்ந்தவராக இருந்தார். அப்துல்லாஹ் சக்காலவி ஸாஹிப் மற்றும் அவரது ஆதரவாளர்கள் ஹதீஸ்களை ஏற்கவில்லை; திருக்குர்ஆனை மட்டுமே ஏற்பதாகக் கூறினர். மறுபுறம், அல்லாஹ்வின் வேதமான திருக்குர்ஆனின் நீதிபதியாக ஹதீஸ்கள் இருக்கின்றன என்பது முஹம்மது ஹுஸைன் பட்டாலவியின் கொள்கையாக இருந்தது. இரு தரப்பினரும் மிகைப்படுத்துதல் மற்றும் குறைவு ஏற்படுத்துதல் என்ற நிலைகளை எட்டியிருந்தனர்.

இந்த விவாதம் குறித்து மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஒரு ரிவ்யூ எழுதினார்கள். அது 'ரூஹானி கஸாயீன்' தொகுதி 19-ல் 'ரிவ்யூ பர் முபாஹஸா பட்டாலவி வ சக்டால்வி' என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ளது.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள், திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸ்களின் மகத்துவ மிக்க வழிகாட்டல்கள் குறித்து வழங்கியுள்ள வழிகாட்டல்கள் கீழே சமர்ப்பிக்கப்படுகின்றன. முஸ்லிம் ஆலிம்களுக்கும், அவர்களின் ஆட்சியாளர்களுக்கும் இந்த வழிகாட்டலானது பின்பற்றத் தக்கதாக உள்ளது.

அன்னார் (அலை) கூறினார்கள்:

'நீங்கள் நேர்வழி பெறும்பொருட்டு இறைவன் உங்களுக்கு இந்த மூன்று விஷயங்களை வழங்கியுள்ளான். முதல் விஷயம், திருக்குர்ஆன். நேர்வழிக்கான இரண்டாவது வழிமுறை சுன்னத் ஆகும். அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது செயலால், அமலால் திருக்குர்ஆனை நடைமுறைப்படுத்திக் காட்டித் தந்த அந்த தூய முன்மாதிரியாகும். உதாரணமாக, இவ்வாறு தொழ வேண்டும் என்று தொழுது காட்டினார்கள். தாமே நோன்பு நோற்று இவ்வாறு நோன்பு நோற்க வேண்டும் என்று காட்டினார்கள். இதன் பெயர் சுன்னத் ஆகும். அதாவது இறைவனின் கூற்றை செயல் வடிவில் காட்டித் தந்து கொண்டிருந்த இறைத் தூதரின் நடைமுறை. இதன் பெயரே சுன்னத் ஆகும்.

நேர்வழிக்கான மூன்றாவது வழிமுறை ஹதீஸ் ஆகும். இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு அன்னாரின் கூற்றுகள் ஒன்று திரட்டப்பட்டது. ஹதீஸ்களின் அந்தஸ்து என்பது திருக்குர்ஆன் மற்றும் சுன்னத்தின் அந்தஸ்தை விட அந்தஸ்தில் குறைந்ததாகும். ஏனெனில் பெரும்பாலான ஹதீஸ்கள் ஊகத்தின் அடிப்படையில் அமைந்தவையாகும். ஆனால், அவை திருக்குர்ஆன் மற்றும் சுன்னத்துடன் ஒத்துப்போனால், அவை அதனை நம்பிக்கைக்குரியதாக ஆக்கிவிடும்.' (கிஷ்தீ நூஹ், பக்கம் 33-34, வெளியீடு: நஸாரத் நஷ்ர் வ இஷாஅத் காதியான், 2018).

அந்த வழிகாட்டல் குறித்து ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மேற்குறிப்பிட்ட இரு ஆலிம்கள் நிகழ்த்திய மார்க்க விவாதத்தை குறித்து வழங்கிய ரிவ்யூவில் இவ்வாறு கூறினார்கள்:

அசல் விஷயம் என்னவென்றால், இந்த இரு தரப்பினரில் ஒருவர் மிகையான (வரம்பு மீறலான) வழியைத் தேர்ந்தெடுத்துள்ளார். மேலும் மற்றொருவர் தஃப்ரீத் (எனும் ஆகுமற்ற) குறைவு செய்தல் என்ற வழிமுறையை மேற்கொண்டுள்ளார். முதல் தரப்பு, அதாவது முஹம்மது ஹுஸைன் அவர்கள், ஹதீஸே மர்ஃபூ மற்றும் முத்தஸிலா போன்றவற்றை வீணானவையாகவும், குப்பையாகவும் கருதக் கூடாது என்ற விஷயத்தில் உண்மையாளர் ஆவார். இருந்தபோதிலும், அவர் படித்தரங்களை பேணுதலுக்கான விதிமுறைகளை மறந்து ஹதீஸ்களின் அந்தஸ்தை எந்த அளவிற்கு உயர்ந்த மினாராவில் ஏற்றுகின்றார் என்றால், அதனால் திருக்குர்ஆன் அவமரியாதை செய்யப்படுகின்றது. மேலும் அதனால் அதனை நிராகரிக்க நேரிடுகின்றது. இது மிகத் தெளிவான குற்றமாகும். மேலும் நீதியின் எல்லைகளை தாண்டிச் செல்வதாகும். கம்பீரமும் மேன்மையும் மிக்க அல்லாஹ் கூறுகின்றான்:

இதன் தொடர்ச்சி 11- ம் பக்கம்....

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பேரன்பர் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வாழ்விலிருந்து அன்னார் (அலை) வாய்மையில் நிலைத்திருந்தது தொடர்பான ஈமானை வலுவூட்டும் சம்பவங்கள்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 01 மே 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1405 ஆண்டு **ஹிஜ்ரத்** மாதம் **01 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○

صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

உண்மையை எத்தகைய விலை கொடுத்தும் கடைப்பிடிப்பது, அதில் உறுதியாக இருப்பது மற்றும் இது தொடர்பாக எதிரிகளுக்கே சவால் விடுப்பது குறித்த சில சம்பவங்களை, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைத் தொண்டரான ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து இன்று நான் எடுத்துரைப்பேன்.

முதலாவதாக, அன்னாருடைய மிகப்பெரிய எதிரிகளில் ஒருவரான முஹம்மது ஹுஸைன் படால்வி சாஹிப் என்பவர் அன்னார் மீது காஃபிர் மற்றும் கஸ்ஸாப் (பெரும் பொய்யர்) என்ற அவதூறைச் சுமத்தினார். அந்த அவதூறுக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அளித்த பதிலை நான் எடுத்துரைப்பேன். அது எத்தகைய தெளிவான பதிலும் சவாலும் என்றால், எவராவது ஒருவர் நீதியின் கண்ணோட்டத்துடன் அதைப் பார்த்தால், இந்த அவதூறுகளை ஒருபோதும் நம்பவே மாட்டார். ஆனால், கண்களில் துணி கட்டப்பட்டிருந்தால் ஒளியைக் காண முடியாது; இன்றைய கால மவ்லவிகளின் நிலையும் இதுவேயாகும்.

ஒருமுறை முஹம்மது ஹுஸைன் படால்வி ஸாஹிப் அவர்கள் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் அன்னாரை மார்க்கத்திற்கு எதிரானவர், இஸ்லாமிய மார்க்கத்தின் எதிரி, காஃபிர் மற்றும் கஸ்ஸாப் என எழுதியிருந்தார் – நவூதுபில்லாஹ்!

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மவ்லவி சாஹிபின் அந்த கடிதத்திற்கு விரிவான பதில் அளித்தவாறு இவ்வாறு எழுதுகிறார்கள்:

‘ தாங்கள் உண்மையைத் தேடுபவராக மாறி எனது வாழ்க்கை வரலாற்றின் மீது ஒரு பார்வை செலுத்தினால், இறைவன் என்னை எப்போதும் பொய்யின் அசுத்தத்திலிருந்து பாதுகாத்தே வந்திருக்கிறான் என்பது உறுதியான சான்றுகள் மூலம் தங்களுக்குத் தெளிவாகும். சில நேரங்களில் ஆங்கிலேய நீதிமன்றங்களில் எனது உயிருக்கும் கண்ணியத்திற்கும் எத்தகைய ஆபத்துகள் ஏற்பட்டன என்றால், பொய் சொல்வதைத் தவிர வேறு வழியில்லை என்று அனைத்து வழக்கறிஞர்களும் எனக்கு ஆலோசனை கூறினார்கள். நீங்கள் பொய் சொன்னால் மட்டுமே இந்த காரியம் கைகூடும் என்று அனைவரும் கூறினர். ஆனால், அல்லாஹ் வழங்கிய நல்வாய்ப்பால், உண்மைக்காக எனது உயிர் மற்றும் கண்ணியத்தைத் தியாகம் செய்ய நான் துணிந்துவிட்டேன். பலமுறை சொத்து தொடர்பான வழக்குகளில் வெறும் உண்மைக்காகப் பெரும் நஷ்டங்களை நான் சுமந்திருக்கிறேன். பல சந்தர்ப்பங்களில் அல்லாஹ்வின் மீதான அச்சத்தின் காரணமாக, எனது தந்தை மற்றும் சகோதரருக்கு எதிராகவும் நான் சாட்சியம் அளித்துள்ளேன்; ஆனால் உண்மையை ஒருபோதும் கைவிடவில்லை.‘

அன்னார் (அலை) மேலும் கூறுகிறார்கள்: ‘இந்தக் கிராமத்திலும் படாலாவிலும் அதாவது, காதியானிலும் படாலாவிலும் எனது வாழ்நாளின் பெரும் பகுதி கழிந்துள்ளது. எனது நாவிலிருந்து எப்போதாவது பொய் வெளிப்பட்டதாக எவரால் நிரூபிக்க முடியும்? ஆரம்பத்திலிருந்தே நான் அல்லாஹ்வுக்காக மனிதர்களிடம் பொய் சொல்வதைக் கைவிட்டிருக்கும்போது, பலமுறை எனது உயிர் மற்றும் சொத்துக்களை உண்மைக்காகத் தியாகம் செய்திருக்கும்போது, பிறகு நான் ஏன் இறைவனின் மீது பொய் சொல்லப் போகிறேன்?‘

படால்வி ஸாஹிப் அவர்கள் அந்தக் கடிதத்தில், பொய் சொல்வதும், ஏமாற்றுவதும் தங்களிடம் பிரிக்க முடியாத பண்பாக மாறிவிட்டது; அது தங்களது இயல்பின் ஒரு பகுதியாகவே ஆகிவிட்டது என்றும் எழுதியிருந்தார் - நவூதுபில்லாஹ்!

ஆனால் உண்மையில், இது மவ்லவி சாஹிபின் அப்பட்டமான பொய்யும், இட்டுக்கட்டப்பட்ட அவதூறும் ஆகும். இதற்கான எவ்வித ஆதாரமும் அவரிடம் இருக்கவில்லை.

எனவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அதற்குப் பதிலளிக்கும்போது இவ்வாறு எழுதினார்கள்:

‘ஷேக் சாஹிப் அவர்களே! இறையச்சம் உடையவரும், நல்ல விதமாக பிறந்தவருமான ஒருவர், முதலில் எவ்வித முழுமையான ஆய்வும் இன்றித் தனது சகோதரர் மீது பாவம் மற்றும் குஃப்ர் என்ற அவதூறைச் சுமத்த மாட்டார். அவ்வாறு சுமத்தினால், காண்பவர்களுக்குப் பகல் பொழுதைப் போலத் தெளிவாகத் தெரியும் வகையில் அதற்கான முழுமையான ஆதாரத்தைச் சமர்ப்பிப்பார். எனவே, தாங்கள் மேற்சொன்ன இரு பண்புகளையும் கொண்டவர் என்றால், வல்லமையும் மாண்பும் மிக்க அந்த இறைவன் மீது ஆணையாக! - அந்த இறைவன் மீது ஆணையிட்டு கேட்கப்படும்போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் கவனத்துடன் பதிலளிப்பார்கள் – தங்களது கருத்துப்படி இந்த எளியவனிடம் உள்ளதாக தாங்கள் கருதும் அந்த இரு தீய பண்புகளையும் நிரூபித்துக் காட்டுங்கள். அதாவது, முதலாவதாக நான் இஸ்லாமிய மார்க்கத்திற்கு எதிரானவன், காஃபிர் என்பது; இரண்டாவதாக, பொய் சொல்வதே எனது வழக்கம் என்பது. தாங்கள் இரண்டு அவதூறுகளைச் சுமத்துகின்றீர்கள்; நான் காஃபிர், முஸ்லிம் அல்ல என்பது - சரி, அதனை நிரூபியுங்கள். இரண்டாவது அவதூறு, நான் பொய்யன் என்பது - அதனை நிரூபியுங்கள்.‘

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்;

உங்களில் யார் பேச்சில் அதிக உண்மையாளரோ, அவரே தனது கனவுகளிலும் அதிக உண்மையாளராக இருப்பார். இந்த ஹதீஸில் ஓர் உண்மையாளருக்கான அடையாளமாக, அவருடைய கனவுகளில் உண்மை மேலோங்கி இருக்கும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)

அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இப்போது தாங்கள் (அதாவது, மவ்லவி முஹம்மது ஹுஸைன் படால்வி ஸாஹிப்), ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொண்டுள்ளதாகக் கூறுகின்றீர்கள். எனவே, தாங்கள் நயவஞ்சகத்தினால் இதைக் கூறாமல், உண்மையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வார்த்தைகளை உண்மையென நம்புபவராக இருந்தால், வாருங்கள்! இந்த அளவுகோலின் அடிப்படையில் நம்மில் யார் உண்மையாளர்? யாருடைய இயல்பில் பொய் கலந்துள்ளது? என்பதை ஒருவருக்கொருவர் சோதித்துப் பார்ப்போம்!

அதேபோன்று கம்பீரமும், மேன்மையும் மிக்க அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

لَهُمُ الْبُشْرٰى فِي الْحَيٰوةِ الدُّنْيَا

பொருள்: அவர்களுக்கு இவ்வுலக வாழ்விலும் இறைவன் புறமிருந்து நற்செய்தி உண்டு.

அதாவது, மற்றவர்களை விடவும் நம்பிக்கையாளர்களின் கனவுகள் உண்மையாக வெளிப்படுவது என்பது அவர்களுக்கே உரிய தனிச்சிறப்பாகும். தாங்களோ, திருக்குர்ஆன் மீதும் ஈமான் கொள்வதாக வாதிடுகின்றீர்கள். மிக நன்று! திருக்குர்ஆனின் அடிப்படையிலும் நம்மில் நம்பிக்கை கொண்டவருக்குரிய அடையாளம் யாரிடம் இருக்கிறது? என்பதைச் சோதித்துப் பார்ப்போம்!

இந்த இரண்டு சோதனைகளையும் எவ்வாறு செய்யலாம்? என்றால், படாலா அல்லது லாகூர் அல்லது அமிர்தசரஸில் ஒரு சபையை ஏற்பாடு செய்து, இரு தரப்பு கனவுகளுக்கான சாட்சிகளும் அதில் ஆஜராகட்டும்! பிறகு, நம் இருவரில் யார் உறுதியான மற்றும் தெளிவான சான்றுகள் மூலம் தனது கனவுகளில் அதிக உண்மையாளர் என்று நிரூபிக்கப்படுகிறாரோ, அவருக்கு எதிராக இருப்பவருக்கு கஸ்ஸாப், தஜ்ஜால், காஃபிரே அக்பர் (பெரும் காஃபிர்), மல்வூன் (சாபத்திற்குரியவர்) அல்லது எத்தகைய பெயர்கள் தீர்மானிக்கப்படுகிறதோ, அந்தப் பட்டங்களை உடனே அவருக்குச் சூட்டிவிடலாம்.

கடந்த காலச் சான்றுகளைச் சமர்ப்பிக்க தங்களுக்கு இயலவில்லை என்றால், நான் அதை ஏற்றுக் கொண்டு ஆறு மாத கால அவகாசம் தருகிறேன்; அதற்குள் தங்களது மறைவான செய்திகளைக் கொண்ட கனவுகளைச் சில செய்தித்தாள்களில் வெளியிடுங்கள். நான் கடந்த காலச் சான்றுகளைத் தருவதோடு மட்டும் நின்றுவிடாமல், ஆற்றல் மிக்கவனாகிய அல்லாஹ் நாடினால், தங்களுக்கு எதிராக எனது கனவுகளையும் பதிவு செய்வேன்.

தாங்கள் திருக்குர்ஆன் மீதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் ஈமான் கொள்வதாக வாதிப்பது போன்றே அந்த நேசத்திற்குரிய நபி (ஸல்) அவர்கள் மீதும், அந்த நேசத்திற்குரிய வேதமான திருக்குர்ஆன் மீதும் நான் எனது உள்ளத்தாலும், உயிராலும் ஈமான் கொண்டுள்ளேன் என்பதே எனது வாதமுமாகும். இப்போது, இந்த அடையாளத்தைக் கொண்டு தத்தமது வாதத்தில் யார் உண்மையாளர்? யார் பொய்யர்? என்பது சோதிக்கப்படும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் திருக்குர்ஆனும் ஏற்படுத்திய இந்த அடையாளத்தின் அடிப்படையில் நான் தோற்றுப்போனால், அப்போது தாங்கள் உண்மையாளராக இருப்பீர்கள்; தங்களுடைய வாதப்படி நான் காஃபிர், தஜ்ஜால், ஈமானற்றவன், ஷைத்தான், கஸ்ஸாப் மற்றும் (இறைவன் மீது) அவதூறு சுமத்துபவன் ஆகிவிடுவேன். அவ்வாறான சூழலில், என் மீது தாங்கள் வைத்துள்ள அனைத்துத் தவறான எண்ணங்களும் சரியானவையாகவும் உண்மையானவையாகவும் ஆகிவிடும். அதாவது, நான் பராஹீனே அஹ்மதிய்யாவில் மோசடி செய்தேன் என்றும், மக்களின் பணத்தை விழுங்கினேன் என்றும், துஆக்கள் ஒப்புக்கொள்ளப்படும் என்று வாக்குறுதியளித்துவிட்டு மக்களின் செல்வத்தை அபகரித்தேன் என்றும், ஹராமான வழியில் வாழ்க்கை நடத்தினேன் என்றும் தாங்கள் சுமத்திய அசுத்தமான அவதூறுகள் உண்மையாகிவிடும்.

ஆனால், நம்பிக்கை கொண்டவர்கள் மற்றும் உண்மையாளர்கள் ஆகியோருடன் இருக்கக்கூடிய அல்லாஹ்வின் அந்த அருள் என்னை உண்மையாளர் என்று நிரூபித்துவிட்டால், அப்போது சொல்லுங்கள்! அந்தப் பெயர்கள் அனைத்தும் தங்களுடைய மவ்லவி எனும் அந்தஸ்திற்கு பொருத்தமாக இருக்குமா? அல்லது அப்போதும் தப்பிச் செல்வதற்கு ஏதேனும் வழியைத் தேடுவீர்களா? இதுவே எனது சவால்!

தாங்கள் எனக்குப் பெரும் வேதனையையும் துன்பத்தையும் அளித்துள்ளீர். நான் பொறுமை காத்து வந்தேன். ஆனால் தங்களது அடிமனதை அறிந்த அந்த ஆற்றல் மிக்க இறைவனைப் பற்றி தாங்கள் சிறிதும் அச்சம் கொள்ளவில்லை. தங்களைப் பற்றியும் தங்களைப் போன்ற எண்ணம் கொண்டவர்களைப் பற்றியும் அல்லாஹ் எனக்கு முன்னறிவிப்பாக இந்தச் செய்தியை நல்கியுள்ளான்:

إِنِّي مُهِينٌ مَنْ أَرَادَ إِهَانَتَكَ

பொருள்: உம்மை இழிவுபடுத்த முனைபவனை நான் இழிவுபடுத்துவேன் என்று இறைவன் எனக்கு முன்னறிவிப்புச் செய்துள்ளான்.

எனவே உறுதியாகத் தெரிந்து கொள்ளுங்கள்! இந்த அவதூறுகள் அனைத்திலும் தாங்கள் பொய்யர் என்பதை அல்லாஹ் நிரூபிக்கும் காலம் நெருங்கிவிட்டது. அவதூறு கற்பிப்பவர்களுக்கும் பொய்யர்களுக்கும் எத்தகைய இழிவுகளும், வெட்கக்கேடுகளும் ஏற்படுமோ, அத்தகைய அடியை இறைவன் தங்கள் மீது இறக்குவான். தாங்கள் திருக்குர்ஆன் மீதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் ஈமான் கொள்வதாக வாதிடுகின்றீர்கள். மவ்லவி சாஹிப்! தாங்கள் இந்தக் கூற்றில் உண்மையாளராக இருந்தால் சோதனைக்காகக் களத்திற்கு வாருங்கள்; அப்போது அல்லாஹ் நமக்கிடையே தீர்ப்பு வழங்குவான். யார் பொய்யரோ, யார் தஜ்ஜாலோ அவர் முகம் கறுக்கட்டும்!

உண்மைக்கு ஆதரவாக இப்போது எனது உள்ளத்தில் ஒரு விஷயம் எழுகிறது; என்னால் அதைத் தடுக்க முடியவில்லை. ஏனெனில் அது எனது சொந்த எண்ணமல்ல, மாறாக எனது இறைவனிடமிருந்து பெரும் வேகத்துடன் பொங்கி எழும் செய்தியாகும். அது என்னவென்றால், தாங்கள் என்னை காஃபிர் என்று கூறி, பொய் சொல்வதை எனது இயல்பின் குணம் என்று தீர்மானித்திருப்பதால், அந்த அல்லாஹ்வின் மீது ஆணையாகக் கூறுகிறேன், மேற்சொன்ன முறைப்படி என்னுடன் மோதுவதற்கு உடனடியாக வாருங்கள்! திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றுப்படி யார் கஸ்ஸாப்? தஜ்ஜால்? காஃபிர்? என்பது அப்போது தெரியவரும்!

இதன் தொடர்ச்சியாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மேலும் கூறுகிறார்கள்:

‘ இதனுடன் கூடவே, உண்மையாளர்களைச் சோதிப்பதற்கான மற்றொரு வழியும் உண்டு. அதனை அல்லாஹ்வே உருவாக்குகிறான். அது என்னவென்றால், சில நேரங்களில் மனிதன் எத்தகையதொரு சோதனையில் சிக்கிக் கொள்கிறான் என்றால், அந்த நேரத்தில் பொய் சொல்வதைத் தவிரத் தப்பிப்பதற்கோ அல்லது வெற்றி பெறுவதற்கோ வேறு எந்த வழியும் அவனுக்குத் தெரிவதில்லை. அப்போதுதான் அவனது இயல்பில் உண்மை இருக்கிறதா? அல்லது பொய் இருக்கிறதா? என்பது சோதிக்கப்படுகிறது.‘

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இயல்பிலேயே பொய்யும்

திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

ஏமாற்றுதலும் இருக்கிறது என்று மவ்லவி சாஹிப் அவர்கள் எழுதியிருந்தார் அல்லவா? அதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: 'உண்மை எது? பொய் எது? என்பது சோதனை நேரத்தில்தான் தெரியவரும். அத்தகைய இக்கட்டான நேரத்தில் ஒருவனது நாவிலிருந்து உண்மை வெளிப்படுகிறதா? அல்லது தனது உயிர், கண்ணியம் மற்றும் உடைமைகளுக்குப் பாதிப்பு வந்துவிடுமோ! என்று அஞ்சி அவன் பொய் பேசத் தொடங்குகிறானா? என்பதே விஷயம். இத்தகைய உதாரணங்கள் இந்த எளியவனுக்கு பலமுறை ஏற்பட்டுள்ளன. அவற்றை விரிவாகக் கூறுவது உரையை நீட்டிக்கும் என்பதால், மூன்று உதாரணங்களை மட்டும் இங்கே குறிப்பிடுகிறேன். இவற்றுக்கு நிகரான உண்மைக்கான சோதனைக் களங்கள் தங்களுக்கும் ஏற்பட்டிருந்தால், அந்த அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவற்றை ஆதாரங்களுடன் தாங்கள் கண்டிப்பாக வெளியிட வேண்டும். அதன் மூலம் தங்களது வாதம் வெறும் வாய் வார்த்தையல்ல; மாறாகச் சோதனையிலும் துன்பத்திலும் சிக்கியபோதும் தாங்கள் உண்மையை முறிக்கவில்லை; ஒருபோதும் பொய் சொல்லவில்லை என்பது தெரியவரும். இந்த வாதத்தைச் செய்துவிட்டுப் போட்டிக்கு வாருங்கள்.'

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது வாழ்க்கையிலிருந்து மூன்று உதாரணங்களைக் கூறினார்கள். அன்னார் கூறுகிறார்கள்:

'ஒன்று; எனது தந்தை காலமான பிறகு, லாகூரைச் சேர்ந்த மிர்ஸா ஆஸம் பேக் என்பவர் காதியானில் உள்ள எங்களது சொத்துக்களில் பங்குதாரர்களாக இருந்தவர்களுடன் இணைந்து, எனக்கும் எனது மறைந்த சகோதரர் மிர்ஸா குலாம் காதிர் அவர்களுக்கும் எதிராக மாவட்ட நீதிமன்றத்தில் நில உரிமை தொடர்பான வழக்கைத் தொடர்ந்தார். அந்தப் பங்குதாரர்களுக்கு நிலத்தின் மீது எவ்வித ஈடுபாடும் இல்லை என்பதை நான் வெளிப்படையாக அறிந்திருந்தேன். ஏனெனில் சீக்கிய ஆட்சிக் காலத்தில் அது கைவிட்டுப்போன ஒரு பொருளாக இருந்தது. எனது தந்தை அவர்கள் தனி ஒருவராகப் பல வழக்குகளை நடத்தி, அந்த நிலத்தையும் மற்ற கிராமங்களையும் மீட்டெடுப்பதற்காக சுமார் எட்டாயிரம் ரூபாய் வரை செலவு செய்திருந்தார்கள். அதில் அந்தப் பங்குதாரர்கள் ஒரு பைசா கூட வழங்கவில்லை.

எனவே, இந்த வழக்கு நடந்து கொண்டிருந்தபோது நான் வெற்றி பெறுவதற்காக துஆ செய்தபோது, எனக்கு இந்த இல்ஹாம் கிடைத்தது:

أُجِيبُ كُلَّ دُعَائِكَ إِلَّا فِي شُرَكَائِكَ

அதாவது, 'உமது அனைத்து துஆக்களையும் நான் ஏற்றுக் கொள்வேன்; ஆனால் உமது பங்குதாரர்கள் விஷயத்தில் மட்டும் ஏற்றுக் கொள்ள மாட்டேன்.'

நீர் செய்யும் இந்தத் துஆ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்று எனக்கு அறிவிக்கப்பட்டது. ஆகவே, இந்த இறைச் செய்தியைப் பெற்றவுடன், எனது சகோதரர் மற்றும் அனைத்து ஆண், பெண் உறவினர்களையும் - அவர்களில் சிலர் இப்போதும் உயிருடன் உள்ளனர் - ஒன்றுகூட்டி, இந்தப் பங்குதாரர்களுக்கு எதிராக வழக்கு நடத்தாதீர்கள்; இது இறைவிருப்பத்திற்கு மாறானது. நாம் வழக்கு நடத்துவதை அல்லாஹ் விரும்பவில்லை என்று வெளிப்படையாகக் கூறிவிட்டேன். ஆனால் அவர்கள் அதனை ஏற்கவில்லை. இறுதியில் அவர்கள் தோல்வியையே தழுவினார்கள்.

இருப்பினும், எனது தரப்பில் ஆயிரக்கணக்கான ரூபாய் நஷ்டத்தை அடைந்தபோதிலும், நான் அதில் மன உறுதியைக் காட்டினேன். நான் பண நஷ்டத்தை ஏற்றுக் கொண்டேன். ஆனால் அல்லாஹ் தடுத்ததால்தான் நான் அந்த வழக்கை நடத்தவில்லை என்பதில் உறுதியாக இருந்தேன். எனக்கு எதிரிகளாக இருப்பவர்கள் கூட, நான் அந்த வழக்கை நடத்தவில்லை என்பதற்குச் சாட்சிகளாக உள்ளனர். நிலம் தொடர்பான அனைத்துப் பொறுப்புகளும் எனது சகோதரரின் கையில் இருந்ததால், நான் அவருக்கு மீண்டும் மீண்டும் புரிய வைத்தேன். ஆனால் அவர் அதைக் கேட்கவில்லை; இறுதியில் நஷ்டத்தைச் சந்தித்தார். அந்த வழக்கிலும் தோற்றுப்போனார்.'

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எடுத்துரைத்த இரண்டாவது உதாரணம் என்னவென்றால்,

சுமார் பதினைந்து அல்லது பதினாறு ஆண்டுகள் இருக்கலாம் அல்லது அதற்கும் சற்று கூடுதலாக இருக்கலாம்; இந்த எளியவன் ஆரியர்களுக்குப் பதிலடியாக இஸ்லாத்திற்கு ஆதரவாக ஒரு கட்டுரை எழுதினேன். அதனை அச்சிடுவதற்காக அம்ரித்சரில் வசித்து வந்த ரலியாராம் என்ற ஒரு கிறித்தவரின் அச்சகத்திற்கு அனுப்பினேன். அவர் ஒரு வழக்கறிஞராகவும் இருந்தார். சொந்தமாக ஒரு செய்தித்தாளையும் நடத்தி வந்தார். அந்தக் கட்டுரையை இரண்டு பக்கமும் திறந்த நிலையில் இருந்த ஒரு பார்சலில் அனுப்பி, அதற்குள் ஒரு கடிதத்தையும் வைத்திருந்தேன். அந்தக் கடிதத்தில் இஸ்லாத்திற்கு ஆதரவாகவும் பிற மதங்களின் கொள்கைகளை மறுத்தும் சில வாசகங்கள் இருந்தன. மேலும், அந்தக் கட்டுரையை விரைவாக அச்சிடுமாறு அதில் வலியுறுத்தியிருந்தேன்.

மத ரீதியான காழ்ப்புணர்ச்சி கொண்டிருந்த அந்தக் கிறிஸ்தவர் ஆத்திரமடைந்தார். தபால் சட்டப்படி, அஞ்சல் பார்சலில் தனியாக ஒரு கடிதத்தை வைப்பது குற்றமாகும். இது பற்றி இந்த எளியவனுக்கு எவ்விதத் தகவலும் தெரிந்திருக்கவில்லை. இத்தகைய குற்றத்திற்கு தபால் சட்டப்படி 500 ரூபாய் அபராதம் அல்லது ஆறு மாத சிறைத்தண்டனை விதிக்கப்படலாம். இதனை எதிர்ப்பாளர் ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு, தபால் துறை அதிகாரிகளிடம் இது குறித்துப் புகார் அளித்து என் மீது வழக்குத் தொடர்ந்தார்.

இந்த வழக்கு பற்றி எனக்குத் தெரிய வருவதற்கு முன்பே, என்னைக் கடிப்பதற்கு ஒரு பாம்பை என்னிடம் வழக்கறிஞர் ரலியாராம் அனுப்பியுள்ளார்; நான் அதனை மீனைப் போல பொரித்து அவரிடமே திருப்பி அனுப்பிவிட்டேன் என்று அல்லாஹ் ஒரு கனவின் மூலம் எனக்கு இதனை வெளிப்படுத்தினான். இறுதியில் நீதிமன்றத்தில் அந்த வழக்கு முடிவுக்கு வந்த விதம், வழக்கறிஞர்களுக்கு ஒரு சிறந்த முன்னுதாரணமாக அமைந்தது என்பதையே அந்தக் கனவு உணர்த்தியது.

இந்தக் குற்றச்சாட்டின் அடிப்படையில் நான் குர்தாஸ்பூர் மாவட்ட நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டேன். வழக்கு தொடர்பாக நான் எந்தெந்த வழக்கறிஞர்களிடம் ஆலோசித்தேனோ, அவர்கள் அனைவரும் பொய் சொல்வதைத் தவிர வேறு வழியில்லை என்று கூறினார்கள். அந்த பார்சலில் கடிதம் எதையும் வைக்கவில்லை; ரலியாராம்தான் அதனை உள்ளே வைத்திருப்பார் என்று வாக்குமூலம் கொடுங்கள் என ஆலோசனை வழங்கினார்கள். மேலும், இவ்வாறு கூறினால் சாட்சியங்களின் அடிப்படையில் நீங்கள் விடுவிக்கப்படுவீர்கள்; இரண்டு நான்கு பொய் சாட்சிகளைக் கொடுத்தால் தப்பித்து விடலாம். இல்லையெனில் இந்த வழக்கிலிருந்து தப்புவது மிகக் கடினம் என்று என்னைத் தேற்றுவதற்காகக் கூறினர்.

ஆனால், நான் அவர்களுக்குப் பதிலளிக்கையில், எந்தச் சூழலிலும் நான் உண்மையை கைவிட விரும்பவில்லை. எது நேருமோ அது நேரட்டும்; என்ன நடக்கிறது? என்று பார்ப்போம். ஆனால் நான் பொய் சொல்ல மாட்டேன் என்று கூறிவிட்டேன்.

அன்றைய தினமோ அல்லது அடுத்த நாளோ நான் ஓர் ஆங்கிலேய நீதிபதியின்

நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டேன். எனக்கு எதிராகத் தபால் துறை அதிகாரி அரசுத் தரப்பு வாதியாக நின்றார். அப்போது நீதிபதி எனது வாக்குமூலத்தைத் தனது கைப்பட எழுதினார். முதலாவதாக என்னிடம், இந்தக் கடிதத்தை உங்களது பார்சலுக்குள் நீங்கள்தான் வைத்தீர்களா? இந்தக் கடிதமும், பார்சலும் உங்களுக்குச் சொந்தமானதா? என்று கேட்டார்.

அப்போது, நான் எவ்விதத் தயக்கமுமின்றி, ஆம்! இது எனது கடிதம்தான்; எனது பார்சல்தான். நான்தான் இந்தக் கடிதத்தை பார்சலுக்குள் வைத்து அனுப்பினேன். ஆனால், அரசாங்கத்திற்கு வருவாய் இழப்பு ஏற்படுத்த வேண்டும் என்ற தீய எண்ணத்தில் நான் இதனைச் செய்யவில்லை. அதாவது, ஸ்டாம்ப் சேமிக்க வேண்டும் என்று அரசாங்கத்திற்கு நஷ்டமேற்படுத்த நான் நினைக்கவில்லை. மாறாக, இந்தக் கடிதத்தை நான் அந்தக் கட்டுரையின் ஒரு பகுதியாகவே கருதினேன். இதில் எவ்விதத் தனிப்பட்ட விஷயங்களும் எழுதப்படவில்லை என்று பதிலளித்தேன்.

இதனைக் கேட்ட உடனேயே, அல்லாஹ் அந்த ஆங்கிலேய நீதிபதியின் உள்ளத்தை என் பக்கம் திருப்பிவிட்டான். எனக்கு எதிராக நின்ற தபால் துறை அதிகாரி ஆங்கிலத்தில் நீண்ட உரைகளை நிகழ்த்தினார்; பெரும் கூச்சலிட்டார். அவர் பேசியவை எனக்குப் புரியவில்லை என்றாலும், அவர் முன்வைத்த ஒவ்வொரு வாதத்திற்கும் பிறகு அந்த நீதிபதி ஆங்கிலத்தில் சர், சர் (இல்லை, இல்லை) என்று கூறி அவரது வாதங்கள் அனைத்தையும் நிராகரிப்பதை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது.

இறுதியாக, அரசுத் தரப்பு அதிகாரி தனது வாதங்கள் அனைத்தையும் முடித்த பிறகு, தனது மனக்குமுறலை கொட்டித்தீர்த்த பிறகு நீதிபதி தீர்ப்பை எழுதத் தொடங்கினார். சுமார் ஒரு வரி அல்லது ஒன்றரை வரிகள் மட்டும் எழுதிவிட்டு என்னைப் பார்த்து, சரி! தாங்கள் செல்லலாம்! என்று கூறினார். இதனைக் கேட்டவுடன் நான் நீதிமன்ற அறையை விட்டு வெளியே வந்து, எனது உண்மையான பேரருளாளனாகிய அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தினேன். எனக்கு எதிராகப் போட்டியிட்டது ஓர் ஆங்கிலேய அதிகாரி; வழக்கை நடத்தியத் துறையின் அதிகாரியும் ஓர் ஆங்கிலேயர்; அத்தகையச் சூழலிலும் இறைவன் எனக்கு வெற்றியை வழங்கினான். உண்மைத்தன்மையின் பரக்கத்தினால் அல்லாஹ் என்னை அந்தப் ஆபத்திலிருந்து காப்பாற்றினான் என்பதை நான் நன்கு அறிவேன். இதற்கு முன்பே நான் மற்றொரு கனவையும் கண்டிருந்தேன். ஒருவர் எனது தொப்பியைப் பிடுங்குவதற்காகக் கையை நீட்டுகிறார். என்ன செய்யப் போகிறாய்? என்று நான் கேட்டதும், அவர் அந்தத் தொப்பியை எனது தலையிலேயே இருக்க விட்டுவிட்டு, பரவாயில்லை, நன்மையே நடக்கும் என்று கூறினார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எடுத்துரைத்த மூன்றாவது உதாரணம் என்னவென்றால்,

‘ எனது மகன் சுல்தான் அஹ்மத் இந்து நபர் ஒருவர் மீது வழக்குத் தொடர்ந்தார். அந்த நபர் எங்களது நிலத்தில் ஒரு வீட்டைக் கட்டிவிட்டார் என்பதே அந்த வழக்கின் அடிப்படை. எனவே, அந்த வீட்டை இடிக்க வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது. அந்த வழக்கை ஆயத்தம் செய்த முறையில், உண்மைக்கு மாறான ஒரு விஷயம் இடம் பெற்றிருந்தது. அது நிரூபிக்கப்பட்டால் அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படக் கூடிய நிலையில் இருந்தது. அவ்வாறு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டால், சுல்தான் அஹ்மதுவிற்கு மட்டுமல்லாது எனக்கும் அந்த நில உரிமை பறிபோகும் நிலை இருந்தது.

அப்போது எதிர்த்தரப்பினர் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, என்னைச் சாட்சியாகச் சேர்த்தனர். இவரைச் சாட்சியாக வைப்போம்; இவர் என்ன சொல்கிறாரோ? அதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என்று அவர்கள் கூறினர். நான் இதற்காக படாலா சென்றேன். அங்கு வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அருகிலுள்ள துணை அஞ்சல் அதிகாரி பாபு ஃபத்ஹுத்தீன் என்பவரின் வீட்டில் தங்கினேன். அந்த வழக்கு ஓர் இந்து நீதிபதியிடம் இருந்தது. அவருடைய பெயர் இப்போது நினைவில்லை. ஆனால் அவர் ஒரு காலில் ஊனமுற்றவராக இருந்தார்.

அப்போது சுல்தான் அஹ்மதுவின் வழக்கறிஞர் என்னிடம் வந்து, வழக்கு விசாரணைக்கான நேரம் வந்துவிட்டது; தாங்கள் என்ன வாக்குமூலம் அளிக்கப் போகிறீர்கள்? என்று கேட்டார். அதற்கு நான், எது உண்மையான விஷயமோ அதையே வாக்குமூலமாக அளிப்பேன் என்று கூறினேன். அதைக் கேட்ட அவர், அப்படியானால் தாங்கள் நீதிமன்றத்திற்கு வரவேண்டிய அவசியமே இல்லை; நானே சென்று விடுகிறேன். வழக்கைத் தொடர்ந்து நடத்துவதில் எந்தப் பயனும் இல்லை. தாங்கள் உண்மையைச் சொன்னால் இந்த வழக்கு இப்போதே முடிந்துவிடும் என்று கூறினார். மேலும் அவர், நான் வழக்கிலிருந்து பின்வாங்குகிறேன் என்று கூறிவிட்டுத் திரும்பிச் சென்றார். இவ்வாறாக, உண்மையைப் பேண வேண்டும் என்பதற்காக மட்டுமே அந்த வழக்கை நானே தோல்வியடையச் செய்தேன். அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக, உண்மையைப் பேசுவதற்கு முன்னுரிமை வழங்கினேன்; அதன் மூலம் ஏற்பட்ட நிதி இழப்பை ஒரு பொருட்டாகவே நான் கருதவில்லை. நான் இறைவனின் பொருத்தத்தையே நாடினேன்.

இந்த இறுதி இரண்டு உதாரணங்களும் ஆதாரமற்றவை அல்ல. முதல் சம்பவத்திற்கு குர்தாஸ்பூர் வழக்கறிஞர் ஷேக் அyp அஹ்மது அவர்களும் சி.எஸ்.ஐ சர்தார் முஹம்மது ஹயாத் கான் சாஹிப் அவர்களும் சாட்சிகளாவர்; மேலும் குர்தாஸ்பூர் அலுவலகத்தில் அந்த வழக்கின் கோப்புகளும் இருக்கும். இரண்டாவது சம்பவத்திற்கு பாபு ஃபத்ஹுத்தீன் மற்றும் பெயர் நினைவில்லாத அந்த வழக்கறிஞரும், இப்போது லூதியானாவிற்கு மாற்றலாகிவிட்ட அந்த நீதிபதி ஆகியோரும் சாட்சிகளாவர். இந்த வழக்கு நடந்து சுமார் ஏழு ஆண்டுகள் இருக்கும். படாலாவின் பட்வாரி நபி பக்ஷ் என்பவரும் இதற்கு ஒரு சாட்சியாவார். இப்போது இது நினைவிற்கு வருகிறது!

இப்போது ஹஸ்ரத் ஷேக் சாஹிப் அவர்களே! அதாவது, மவ்லவி படால்வியை சாஹிபை விளித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

‘தங்களது உயிர், கௌரவம் மற்றும் பொருள் ஆகியவை ஆபத்தில் இருந்தபோது, உண்மையைச் சொன்னால் நஷ்டம் ஏற்படும் என்று தெரிந்தும் தாங்கள் உண்மையை விடாமல் இருந்ததற்கு தங்களிடமும் இத்தகையதொரு கடுமையான சோதனைக்கால முன்மாதிரி ஏதேனும் இருந்தால் அந்தச் சம்பவத்தை அதன் முழுமையான ஆதாரங்களுடன் அல்லாஹ்வுக்காக எடுத்து வையுங்கள்! இல்லையெனில், இந்தக் காலத்து அநேக முல்லாக்கள் மற்றும் மவ்லவிகளின் பேச்சுகள் வெறும் வாய்வார்த்தைகளே என்பதுதான் எனது நம்பிக்கை. இவர்கள் ஒரு பைசாவிற்காகக் கூடத் தமது ஈமானை விற்கத் தயாராக உள்ளனர். ஏனெனில், நமது நபி (ஸல்) அவர்கள் இறுதி காலத்து மவ்லவிகளைப் படைப்பினங்களிலேயே மிக மோசமானவர்கள் என்று கூறியுள்ளார்கள். மேலும், தங்களுடைய முஜத்தித் நவாப் சித்தீக் ஹசன் கான் மர்ஹூம் அவர்கள் தமது ஹுஜஜுல் கராமா நூலில், அந்த இறுதி காலம் இதுதான் என்று ஒப்புக் கொண்டுள்ளார்.

எனவே, இத்தகைய மவ்லவிகளின் தூய்மையையும், இறையச்சத்தையும் ஆதாரமின்றி



ஏற்றுக்கொள்வது என்பது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றை மறுப்பதாகும்.

எனவே, தாங்கள் ஒரு முன்மாதிரியைச் எடுத்து வையுங்கள்! அவ்வாறு எடுத்து வைக்கத் தவறினால், தங்களிடம் உண்மை பேசுவதற்கான வாதம் மட்டுமே உள்ளது என்பதும், சோதனையின்றி எவ்வித வாதமும் ஏற்புடையதல்ல என்பதும் நிரூபணமாகும். தங்களுடைய அக நிலையை அல்லாஹ் அறிவான்; தாங்கள் எப்போதாவது பொய் மற்றும் அவதூறு என்ற அசுத்தத்தில் சிக்கினீர்களா? இல்லையா? என்பது எனக்குத் தெரியாது. அல்லாஹ்வுக்கு தெரியும். மறைவானவற்றை அவன் மட்டுமே அறிவான்; அல்லது தங்களைப் பற்றி நன்கு அறிந்தவர்களுக்கு அது தெரியும். சோதனையின் போது யார் உண்மையாளராக வெளிப்பட்டு, உண்மையைக் கைவிடாமல் இருக்கிறாரோ அவரது உண்மையின் மீது முத்திரை பதிக்கப்படுகிறது. அத்தகைய முத்திரை தங்களிடம் இருந்தால் அதனை எடுத்து வையுங்கள். இல்லையெனில் அல்லாஹ் தங்களது இரகசியத்தை வெளிப்படுத்தி விடாமல் இருக்கும் வண்ணம் அவனுக்கு அஞ்சுங்கள்.‘

மிர்ஸா சுல்தான் அஹ்மது அவர்கள் அந்த வீட்டை இடிப்பது தொடர்பாக தொடர்ந்த வழக்கின் பின்னணியில் உள்ள கூடுதல் விவரங்கள் இவ்வாறு எழுதப்பட்டுள்ளன: ஜம்மு மாகாணத்தில் அரசு அதிகாரியாகப் பணியாற்றி வந்த ஷங்கர்தாஸ் என்ற ஓர் இந்து நபர், காதியானில் உள்ள மஸ்ஜித் அக்ஸாவிற்கு கிழக்குத் திசையில் காலியாகக் கிடந்த நிலத்தை ஆக்கிரமித்து அங்கு ஒரு வீட்டைக் கட்டியிருந்தார். பிற்காலத்தில் அந்த இடத்தில்தான் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் அலுவலகங்கள் அமைக்கப்பட்டன. மிர்ஸா சுல்தான் அஹ்மது சாஹிப் அவர்கள் அந்த வீட்டை இடிக்கக் கோரி வழக்குத் தொடர்ந்தார். ஆனால், வழக்கின் கோப்பில் உண்மைக்கு மாறான ஒரு விபரம் இடம் பெற்றிருந்தது. அது நிரூபிக்கப்பட்டால் வழக்கு தள்ளுபடி செய்யப்படுவதோடு மட்டுமல்லாமல், அந்த நிலத்தின் மீதான உரிமை பறிபோகும் என்பதால் மிர்ஸா சுல்தான் அஹ்மது அவர்களுக்கும், இன்னும் கூறுவதென்றால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கும் கூட நஷ்டம் ஏற்படும் நிலை இருந்தது.

எதிர்த்தரப்பான ஷங்கர்தாஸிற்கு அந்த நிலத்தின் மீது உரிமை இல்லை என்றாலும், ஆக்கிரமிப்பு மூலம் அது அவர் வசமே இருந்தது. அவர் அந்த இடத்திற்கு உரிமையாளராக இருக்கவில்லை. ஆனால், அதை ஆக்கிரமிப்பு செய்திருந்தார். சட்ட ரீதியாகவோ அல்லது எதிர்ப்பின் அடிப்படையிலோ இதிலிருந்து அவர்கள் பயன்பெறவே விரும்பினர். எனவே, அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைச் சாட்சியளிக்க வருமாறு கோரினர். ஏனெனில், அவர்கள் எவ்வளவு கடும் எதிரிகளாக இருந்தாலும், மிர்ஸா சாஹிப் அவர்கள் ஒருபோதும் பொய் சொல்ல மாட்டார்கள் என்பதும், எதிர்த்தரப்பின் ஆக்கிரமிப்பு நீண்ட காலமாக உள்ளது என்று அன்னார் நீதிமன்றத்தில் உண்மையைச் சொல்லிவிடுவார்கள் என்பதும் அவர்களுக்குத் தெரிந்திருந்தது.

எதிர்த்தரப்பினர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைச் சாட்சியாக அழைத்திருப்பதை அறிந்த மிர்ஸா சுல்தான் அஹ்மது சாஹிப் அவர்களும், ஹுஸூர் (அலை) அவர்கள் ஒருபோதும் பொய் பேச மாட்டார்கள் என்பதை அறிந்திருந்த காரணத்தால், அந்த வழக்கையே திரும்பப் பெற்றுக் கொண்டார்கள்.

எவ்வாறிருப்பினும், பெரிய மாளிகை போன்ற அந்த வீட்டின் வரலாறு இதுதான்; அது 'டெபுடி ஷங்கர்தாஸின் மாளிகை' என்று அழைக்கப்பட்டது. அவர் மிகவும் மார்க்க துவேஷம் கொண்டவராகவும், பெரும் எதிர்ப்பாளராகவும் இருந்தார். அவருடைய அந்த உயரமான வீட்டினால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வீடுகளின் மறைவுத் தன்மைக்கும் பாதிப்பு ஏற்பட்டது; அதுவும் அந்த வழக்கைத் தொடர ஒரு காரணமாக இருந்தது. அவருடைய எதிர்ப்பு எத்தகையதாக இருந்தது என்றால், தொழுகையாளிகள் மஸ்ஜித் அக்ஸாவிற்குச் செல்லும்போது, இந்த டெபுடி தனது வீட்டின் வாசலில் அமர்ந்து கொண்டு செல்பவர்களைக் கெட்ட வார்த்தைகளால் திட்டுவார்; பல்வேறு வழிகளில் துன்பங்களையும் இடையூறுகளையும் கொடுப்பார்.

அவருடைய தொல்லைகளால் பாதிக்கப்பட்டவர்கள் தமது எஜமானர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் முறையிடும்போது, அன்னார் மிகுந்த மன உறுதியுடனும், கம்பீரத்துடனும் அவர்களுக்கு ஆறுதல் அளிப்பார்கள். பொறுமை காப்பீர்களாக! இறைவனின் முகாமுக்கு முன்னால் எவரும் நிலைக்க முடியாது. அவர் தனது ஒரு முகாமை அமைத்திருக்கலாம்; ஆனால் நமது முகாமோ இறைவனுடைய முகாம்; அதன் முன்னால் எவரும் நிற்க முடியாது என்று கூறுவார்கள். பிறகு பார்ப்பவர்கள் பார்த்தார்கள்; கேள்விப்பட்டவர்கள் கேள்விப்பட்டார்கள் - டெபுடி சாஹிபின் அந்த ஆடம்பரமான வீடு பாழடையத் தொடங்கியது. இறுதியில் அவர் அங்கிருந்து நோயுற்றோ அல்லது வேறு ஏதோ ஒரு காரணத்தினாலோ வெளியேறினார். அந்த வீட்டை ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலி சாஹிப் இர்பானி அவர்கள் விலைக்கு வாங்கினார்கள். பின்னர் 1932-ல் அங்கு சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் அலுவலகங்கள் நிறுவப்பட்டன. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அதனைத் திறந்து வைத்தார்கள்.

இறைவனின் வல்லமை எத்தகையது என்றால், நேற்று எந்த நபர் மமதையுடன் தனது வீட்டின் முன்னால் அமர்ந்து கொண்டு பள்ளிவாசலுக்குச் செல்லும் தொழுகையாளிகளை அனுமதிக்கவில்லையோ, இன்று இறை நியதி அவருடைய பெயரை தடையமே இல்லாமல் அழித்துவிட்டு, அந்த வீடு முழுவதையும், அந்தப் பகுதி முழுவதையும் ஒரு பள்ளிவாசலாக ஆக்கிவிட்டது. மஸ்ஜித் அக்ஸாவின் ஒரு பகுதியாக அது உள்ளது.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நேர்மை மற்றும் உண்மையின் அடிப்படையிலான அந்தச் சாட்சியத்தில் எத்தகைய மகத்தான அருள் உள்ளது என்று பாருங்கள்! அன்னார் உண்மையை விடவில்லை; அதற்காகக் குடும்ப கௌரவத்தையோ அல்லது நிலம் மற்றும் சொத்துக்கள் பறிபோவதையோ அன்னார் பொருட்படுத்தவில்லை. அனைத்தையும் தமது கைகளால் தியாகம் செய்தார்கள். ஆனால் இறைவன் அந்தத் தியாகத்தை ஏற்றுக்கொண்டு, அதற்கு எவ்வாறான மேன்மையையும் அருளையும் வழங்கினான் என்றால், இன்று அது மினாரத்துல் மஸீஹுக்குக் கீழே ஏக இறைவனை வணங்கும் ஓர் இல்லமாகத் திகழ்கிறது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள், அந்த வழக்கின் போது வாதிட்ட வழக்கறிஞரைப் பற்றி எடுத்துரைத்தவாறு கூறுகிறார்கள்:

அக்காலத்தில் பெரும்பாலான வழக்குகளில் குர்தாஸ்பூரைச் சேர்ந்த ஷேக் அலி அஹ்மது சாஹிப் என்ற வழக்கறிஞரே அன்னாருக்காக வாதிடுவார். அன்னாருடைய தூய்மையான வாழ்க்கையைப் பார்த்த பிறகும் அன்னாருடைய வாதத்திற்குப் பிறகு அவர் அஹ்மதியாகவில்லை என்றாலும், அன்னார் (அலை) மீது மிகுந்த நல்லெண்ணம் கொண்டிருந்தார். தபால் தொடர்பான அந்த வழக்கின்போது, வேறெந்த சாட்சியும் இல்லை; அந்தக் கடிதம் கட்டுரையின் உள்ளடக்கத்தைச் சார்ந்ததுதான் என்பதால், அதனை விளம்பரத்தின் ஒரு பகுதி என்றுதான் கூற முடியும். எனவே, நான் விளம்பரத்தைத்தான் அனுப்பினேன், கடிதம் எதனையும் அனுப்பவில்லை என்று பொய் ஏதுமின்றி உங்களால் கூற முடியும் என்று அவர் ஆலோசனை கூறினார்.

ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்

அதனை ஏற்க மறுத்துவிட்டார்கள். அது முடியாது; உண்மையின் நுணுக்கமான நிலைக்கு இது எதிரானது. நான் அதற்குள் கடிதத்தை வைத்திருந்தேன். அது கட்டுரையின் ஒரு பகுதியாக இருந்தாலும், அது ஒரு கடிதம்தான். எனவே கடிதத்தை வைத்தேன் என்றுதான் கூறுவேன். நான் செய்த ஒரு காரியத்தை எவ்வாறு மறுக்க முடியும் என்று கூறினார்கள். அவ்வாறே அன்னார் (அலை) நீதிமன்றத்தில் ஆஜரானபோது நீதிபதி, கட்டுரைக்குள் ஏதேனும் கடிதம் வைத்திருந்தீர்களா என்று கேட்டார். அதற்கு, அன்னார் (அலை) ஆம்! என்று பதிலளித்தார்கள்.

இந்த உண்மைத்தன்மை மற்றவர்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்தியது ஒருபுறமிருக்க, நீதிபதி மீதே எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால், அவர் அன்னாரை நிரபராதி என்று தீர்ப்பளித்து விட்டார். வேண்டுமென்றே செய்யாத ஒரு குற்றத்திற்காக இத்தகைய நேர்மையான மனிதருக்குத் தண்டனை வழங்க முடியாது என்று கூறிவிட்டார்.

அந்தத் தபால் தொடர்பான வழக்கின் வழக்கறிஞரைப் பற்றிக் குறிப்பிடும்போது ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலி சாஹிப் இர்ஃபானி (ரலி) அவர்கள் பின்வருமாறு எழுதுகிறார்கள்:

'வழக்கறிஞர் ஷேக் அலி அஹ்மது சாஹிப் அவர்களே என்னிடம் நேரில் இதை தெரிவித்தார்.

இது, ஷேக் யஃகூப் அலி சாஹிப் இர்ஃபானி அவர்களிடம் அந்த வழக்கறிஞர் அந்த வழக்கின் சம்பவங்களை விவரிக்கும்போது கூறிய வாக்குமூலமாகும்.

அவர் என்ன கூறினார் என்றால், இந்த வழக்கு இறுதியாக தீனா நகர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபோது, அந்தப் பார்சலுக்குள் கடிதம் ஏதும் வைக்கவில்லை என்று மிர்ஸா சாஹிப் அவர்கள் மறுத்துவிட வேண்டும் என்று நான் எவ்வளவோ விரும்பினேன். ஏனெனில், அந்தக் கடிதம் அந்தப் பார்சலுக்குள்ளிருந்துதான் எடுக்கப்பட்டது என்பதற்கு எவ்வித ஆதாரமும் இருக்க முடியாது என்பது எனது கருத்து. அது தொடர்பான சாட்சியங்களும் இருக்கவில்லை. மத வேறுபாடு காரணமாக லாலா ryயாராமின் சாட்சியமும் நீதிமன்றத்தில் எடுபடாது. நான் எந்த அளவுக்கு வற்புறுத்தினேனோ, அந்த அளவுக்கு மிர்ஸா சாஹிப் அவர்கள் அதனை மறுத்தார்கள். இதன் முடிவு நல்லதாக இருக்காது என்றும், வீணாக ஒரு கண்ணியமான குடும்பத்தைச் சேர்ந்தவர் மீது குற்றவியல் வழக்கில் தண்டனை பெற்றார் என்ற கறை படிந்துவிடும் என்றும் நான் அன்னாரிடம் மீண்டும் மீண்டும் கூறினேன். சூழ்நிலை இப்போது தங்களுக்கு எதிராகவே உள்ளது என்றேன். ஆனால் அன்னாரோ அதாவது, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களோ எனது பேச்சைக் கேட்கவில்லை. எனது வாதத்தின் காரணமாக இந்த வழக்கில் தோல்வி ஏற்பட்டால் அது குடும்பத்தினரிடையே எனக்கும் பெரும் அவப்பெயரைத் தரும் என்று நான் கருதினேன்.

எனவே, 'நான் இதனை மறுக்க மாட்டேன்' என்று ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் அவர்கள் உறுதியாகக் கூறியபோது, (அதனை ஒரு சாக்காகப் பயன்படுத்திக் கொண்டு,) 'தாங்கள் எனது பேச்சைக் கேட்கவில்லை என்றால் நான் இந்த வழக்கைத் தொடர்ந்து நடத்த மாட்டேன்; தங்களுக்காக என்னால் வாதாட முடியாது' என்று கூறிவிட்டேன். என்னைப்பொருத்தவரை, வழக்கில் தண்டனை கிடைத்தால், வழக்கறிஞரின் ஆலோசனைக்கெதிராக செயல்பட்டதால்தான் இப்படி நேர்ந்தது என்ற பழி அன்னார் (அலை) மீதே விழும் என்று நான் எண்ணினேன்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு தண்டனை கிடைத்துவிடும் என்று வக்கீல் சாஹிப் அவர்களும் உறுதியாக நம்பினார்கள். தண்டனை கிடைத்து விட்டால், இந்த வழக்கறிஞர் சரியாக வாதாடத் தெரியாதவர் என்று மக்கள் தன்னைத் தூற்றுவார்கள் என்றும் அவர் அஞ்சினார்.

அவர் கூறுகிறார்: 'எனது அவப்பெயருக்கு அஞ்சி நான் கோபத்தை வெளிப்படுத்திவிட்டு நீதிமன்றத்திற்குச் செல்லவில்லை; நான் இல்லாமலேயே விசாரணை நடந்து முடிந்தது. ஆனால் எனது வியப்பிற்கு அளவே இல்லை. வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டதை அறிந்ததும் எனக்கு வருத்தமாக இருந்தது. வீணாகக் கிடைத்திருக்க வேண்டிய ஒரு வெற்றியின் பெருமையை நான் இழந்துவிட்டேனே; இப்போது காலம் கடந்துவிட்டது என்று நான் வருத்தப்பட்டேன்.

ஷேக் அலி அஹ்மது சாஹிப் அவர்கள் இந்தச் சம்பவத்தைக் கூறும்போது, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மன உறுதி மற்றும் நேர்மையைப் பெரிதும் பாராட்டுவார். அந்தக் குடும்பத்துடனான அவரது தொடர்பு அவர் இறக்கும் வரை நீடித்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பொதுவாக அனைத்து வழக்குகளிலும் அவரிடம் ஆலோசனை பெறுவதை விரும்புவார்கள்; அவருக்குக் கண்ணியமும் அளிப்பார்கள்.

இதேபோன்ற பல்வேறு வழக்குகளைப் பற்றிக் குறிப்பிடும்போது ஹஸ்ரத் ஷேக் நூர் அஹ்மது சாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்: 'எனது தந்தையும் பெரியப்பாவும் அடிக்கடி கூறுவார்கள்; எங்களது கிராமம் மிர்ஸா சாஹிப் அவர்களின் நிலப்பகுதிக்கு உட்பட்டிருந்தது. சில காலம் ஹுஸூர் அவர்கள் தமது தந்தையின் பிரதிநிதியாக இருந்தார்கள். எங்களுடன் பலமுறை நீதிமன்றத் தவணைகளுக்காக அன்னார் (அலை) வந்திருக்கிறார்கள். வழக்கிற்கு எத்தகைய பாதிப்பு ஏற்பட்டாலும் சரியே! அன்னார் (அலை) எப்போதும் உண்மையின் பக்கமே நிற்பார்கள். எவ்விதத்திலும் அன்னார் (அலை) உண்மையை நழுவவிட மாட்டார்கள்; பொய்யை அருகில் கூட நெருங்க விடமாட்டார்கள்.'

ஹஸ்ரத் மியான் அல்லாஹ் யார் சாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்: 'ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களுக்கு 25 அல்லது 30 வயது இருக்கும்போது, அன்னாருடைய தந்தைக்கும் நிலத்தில் இருந்த சில குத்தகைதாரர்களுக்கும் இடையே மரம் வெட்டுவது தொடர்பாக ஒரு தகராறு ஏற்பட்டது. நிலத்தின் உரிமையாளர் என்ற அடிப்படையில் மரங்களும் நமக்கே சொந்தம் என்பது அன்னாருடைய தந்தையின் கருத்தாக இருந்தது. எனவே, அவர் குத்தகைதாரர்கள் மீது வழக்குத் தொடர்ந்தார். வழக்கினை நடத்துவதற்காக ஹுஸூர் (அலை) அவர்களை குர்தாஸ்பூர் அனுப்பி வைத்தார். அன்னாருடன் இரண்டு சாட்சிகளும் சென்றனர்.

ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் கால்வாயைக் கடந்து பத்னா வாலா என்ற கிராமத்தை அடைந்தபோது, வழியில் சற்று ஓய்வெடுப்பதற்காக அமர்ந்தார்கள். அப்போது உடன் வந்தவர்களிடம், 'தந்தையாரே வீணாக வற்புறுத்துகிறார்கள்; மரங்களும் பயிர்களைப் போன்றதுதானே. அந்த ஏழை மக்கள் அதனை வெட்டிப் பயன்படுத்தினால் என்ன நஷ்டம் ஏற்பட்டுவிடப் போகிறது? எதுவாக இருந்தாலும் நீதிமன்றத்தில் அந்த மரங்கள் முழுவதுமே எங்களுக்கே சொந்தம் என்று என்னால் கூற முடியாது; வேண்டுமானால் அதில் எங்களுக்கு ஒரு பங்கு உண்டு என்று கூறலாம் என்றார்கள்.

அந்தக் குத்தகைதாரர்களுக்கும் அன்னார் (அலை) மீது அளவற்ற நம்பிக்கை இருந்தது. எனவே, பரம்பரை பரம்பரையாக அங்கு வேலை செய்து வந்த அந்த விவசாயிகளிடம் நீதிபதி இது குறித்துக் கேட்டபோது, அவர்கள் எவ்விதத் தயக்கமுமின்றி, மிர்ஸா சாஹிப் அவர்களிடமே கேட்டு தெரிந்து கொள்ளுங்கள் என்று பதிலளித்தனர். அதாவது பரம்பரையாக அங்கு உழுது பயிரிடும் தொழிலாளர்கள், 'மிர்ஸா சாஹிப் அவர்களிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்; எங்களிடம் ஏன் சாட்சியம் கேட்கிறீர்கள்? அவர் ஒருபோதும் பொய் சொல்ல மாட்டார் என்பது எங்களுக்குத் தெரியும்' என்றனர். நீதிபதி ஹுஸூர் (அலை)

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

அவர்களிடம் கேட்டபோது, 'எனது கருத்தின்படி மரங்கள் பயிர்களைப் போன்றவை; பயிர்களில் எங்களுக்கு எவ்வாறு பங்கு உள்ளதோ, அவ்வாறே மரங்களிலும் பங்கு உண்டு' என்று கூறினார்கள். அன்னாருடைய இந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் நீதிபதி குத்தகைதாரர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்தார்.

அதன் பிறகு ஹுஸுர் அவர்கள் காதியான் திரும்பியபோது, ஹஸ்ரத் மிர்ஸா குலாம் முர்தஸா சாஹிப் அவர்கள் உடன் சென்றவர்களில் ஒருவரிடம், 'என்ன தீர்ப்பு வந்தது?' என்று கேட்டார்கள். அதற்கு, 'நான் வெளியே இருந்தேன்; மிர்ஸா சாஹிப் அவர்கள் உள்ளே சென்றார்கள். அவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்' என்று அவர் கூறிவிட்டார். உடனே ஹுஸுர் (அலை) அவர்கள் அழைக்கப்பட்டார்கள். நடந்த அனைத்தையும் அன்னார் ஒளிவுமறைவின்றி அப்படியே விவரித்தார்கள். அதனைக் கேட்ட அன்னாருடைய தந்தை கடுமையாகக் கோபமடைந்தார்கள்.'

எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மைத்தன்மை தொடர்பான இந்தச் சம்பவங்களை நான் எடுத்து வைத்தேன். ஒரு தவறான மவ்லவி சுமத்திய அவதூறுகளுக்கு அன்னார் (அலை) அளித்த விரிவான விளக்கம்தான் நீண்டதாக இருந்தது. எவ்வாறிருப்பினும் அன்னார் (அலை) எப்போதும் உண்மையையே முன்னிறுத்தினார்கள்; பொய்யை நெருங்கக் கூட இல்லை. இதற்காகத் தன்னைப் பின்பற்றுபவர்களுக்கும் 'எப்போதும் உண்மையிலேயே நிலைத்திருங்கள்' என்று அறிவுறுத்தினார்கள். பைஅத் நிபந்தனைகளிலும் கூட, 'பொய்யை வெறுப்போம்; உண்மையில் நிலைத்திருப்போம்' என்று எழுதப்பட்டுள்ளது.

எனவே, உண்மையின் இந்த மேலான பண்பை நமக்கே உரிய அடையாளமாக மாற்றிக் கொள்வது நமது கடமையாகும். அல்லாஹ் நமக்கு அதற்குரிய நல்வாய்ப்பை வழங்குவானாக!

தமிழாக்கம்
முரப்பி
A.P.A.தாரிக் அஹ்மது

* * * * * * * * * *

**1 - ம் பக்கத் தொடர்ச்சி (வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பொன்மொழிகள்......**

குழப்பமும் ஏற்படாமல் இருப்பதற்காக தமது செயலால் அதாவது செயல் ரீதியாக அந்தக் கூற்றுக்கு விளக்கம் அளித்து விடுகின்றனர். அவர்கள் தாங்களே அந்தக் கூற்றின்படி செயல்பட்டு மற்றவர்களையும் செயல்பட வைக்கின்றனர்.(3) நேர்வழிக்கான மூன்றாவது வழிமுறை ஹதீஸ் ஆகும். ஹதீஸ் என்று நாம் குறிப்பிடுவதன் பொருள் என்னவென்றால், கதைகளின் வடிவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்திற்கு சுமார் 150 ஆண்டுகளுக்குப் பிறகு பல்வேறு அறிவிப்பாளர்கள் மூலம் தொகுக்கப்பட்டதாகும்.

எனவே சுன்னத்திற்கும், ஹதீஸிற்கும் இடையிலான தனித்துவமான வேறுபாடு என்னவென்றால், சுன்னத் என்பது தன்னகத்தே தொடர்ச்சியைக் கொண்ட ஒரு செயல் வழிமுறையாகும்; அதனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது கரங்களால் நடைமுறைப்படுத்தினார்கள். மேலும் அது நம்பிக்கையின் தரத்தின் அடிப்படையில் திருக்குர்ஆனுக்கு அடுத்த அந்தஸ்தில் உள்ளது. திருக்குர்ஆனை பரப்புவதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனுப்பப்பட்டிருந்ததைப் போன்றே சுன்னத்தை நிறுவுவதற்காகவும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனுப்பப்பட்டிருந்தார்கள்.'

(ரிவ்யூவ் முபாஹஸா பட்டாலவி மற்றும் சக்டாலவி, ரூஹானீ கஸாயின் தொகுதி 19, பக்கம் 209-212) * * * * * * * * * *

**1 - ம் பக்கத் தொடர்ச்சி (ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் மேற்கோள்......)**

திருக்குர்ஆன், (2) இறைத் தூதர் (ஸல்) அவர்களின் சுன்னத் (3) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சுன்னத்திற்கும் பகுத்தறிவிற்கும் எதிராக இருக்காத ஹதீஸ்கள் (4) மார்க்க நுண்ணறிவு (தஃபக்குஹ் ஃபித் தீன்) (5) இயல்புகளின் கருத்து வேறுபாடுகளும், சூழ்நிலைகளும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மாபெரும் சாதனை என்னவென்றால், அன்னார் (அலை) சுன்னத் மற்றும் ஹதீஸையும் தனித்தனியாக வேறுபடுத்திவிட்டார்கள். அன்னார் (அலை) கூறினார்கள்: சுன்னத் என்பதோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிறுவிய மற்றும் எதனை பின்பற்றுமாறு பிறரை ஊக்கப்படுத்தினார்களோ அந்த அமல்கள் ஆகும்; ஹதீஸ் என்பதோ அன்னார் (ஸல்) எடுத்துரைத்த கூற்றாகும்.

அன்னார் (அலை) ஐந்து விதிமுறைகளின் மூலம் எவ்வாறு சீர்திருத்தம் செய்துள்ளார்கள் என்று இப்போது பாருங்கள், எல்லாவற்றையும் விட முதன்மையான அந்தஸ்தில் திருக்குர்ஆனை வைத்துள்ளார்கள்; ஏனெனில் அது இறைவனின் கூற்றாகும்; அது முழுமையானதாகும். அது விரிவானதாகும். அதில் எந்த மாற்றமும் நிகழாது; நிகழவுமில்லை; எவரும் எந்த மாற்றத்தையும் செய்ய முடியாது. ஏனெனில், அதன் பாதுகாப்பிற்கான வாக்குறுதி உள்ளது. இத்தகைய வேதத்தை விட வேறு எந்த வேதம் நம்பிக்கைக்குரியதாக இருக்க முடியும். இதன் பிறகு சுன்னத் ஆகும். அதாவது கூற்றுடன் மட்டும் அதற்கு தொடர்பு கிடையாது; மாறாக, அமலுடன் தொடர்பு உள்ளது. மேலும் அமலும் கூட எத்தகையது என்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எதைச் செய்து வந்தார்களோ, மேலும் எதனை தொடர்ச்சியாக செய்து வந்தார்களோ அந்த அமல்கள் ஆகும். ஆயிரக்கணக்கான மக்கள் அதைப் பார்த்து வந்தனர்; மேலும் அதன்படி செயல்பட்டும் வந்தார்கள். அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதை நாங்கள் செவியுற்றோம்' என்று ஒருவரோ அல்லது இருவரோ அல்லது மூவரோ மட்டும் சாட்சி சொல்லவில்லை, மாறாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு அமல் செய்ததை நாங்கள் கண்டோம் என்று அன்னாரைப் பின்பற்றுதலில் ஆயிரக்கணக்கான நபர்களின் அமல் சாட்சியமாக உள்ளது. சுன்னத்தில் தவறுகளுக்கான வாய்ப்பு மிகக் குறைவாகவே இருக்கின்றது. ஒரு சில நபர்களின் சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்ட ஹதீஸை விட, இது மிகவும் சிறந்தது. இதன் பிறகு அன்னார் (அலை) ஹதீஸை வைத்துள்ளார்கள். ஆயினும், ஹதீஸ் அறிவிப்பாளர்களின் நம்பகத்தன்மை மட்டும் அதன் உண்மைத்துவத்தின் அடையாளம் அன்று; , மாறாக, அவை திருக்குர்ஆன், சுன்னத் மற்றும் இயற்கைச் சட்டங்களுக்கு ஏற்புடையதாக இருப்பது அவசியமாகும். என்பதை அதற்கான நிபந்தனையாக விதித்துள்ளார்கள்.'(ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் அரும் பணிகள், அன்வாருல் உலூம்)

தமிழாக்கம்
முரப்பி
A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * * * *

**உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உறுப்பினர்களுக்கு ஒரு முக்கிய நினைவூட்டல்**

நமது அன்பிற்குரிய இமாம் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் அருளுக்குரிய வழிகாட்டலைப் பின்பற்றியவாறு நம்மை நாமே இரும்புக் கோட்டையில் பாதுகாத்து கொள்வதற்காக இன்று நாம் கீழ் காணும் இந்த துஆக்களை செய்து விட்டோமா?

سُبْحَانَ اللّٰهِ وَبِحَمْدِهٖ سُبْحَانَ اللّٰهِ الْعَظِيْمِ
اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّاٰلِ مُحَمَّدٍ

اَسْتَغْفِرُ اللّٰهَ رَبِّيْ مِنْ كُلِّ
ذَنْبٍ وَّاَتُوْبُ اِلَيْهِ

رَبِّ كُلُّ شَيْءٍ خَادِمُكَ رَبِّ فَاحْفَظْنِيْ
وَانْصُرْنِيْ وَارْحَمْنِيْ

**12- ம் பக்கத் தொடர்ச்சி**
**(ஹுஸுர் அன்வர் அவர்களின் ஆஸ்திரேலிய சுற்றுப் பயணம்......**

நோய் எதிர்ப்பு சக்தி பலவீனமடைந்தால் அது அதிக எதிர்வினையை (Over Reaction) ஏற்படுத்தும் என்று அவர் கூறினார். ஆஸ்திரேலியாவில் ஐந்து பேரில் ஒருவருக்கு ஒவ்வாமை பாதிப்பு உள்ளது, இதனால் மக்களின் ஆரோக்கியம் பாதிக்கப்படுவதோடு, அரசுக்கு 7.8 பில்லியன் டாலர் இழப்பு ஏற்படுகிறது. மருத்துவ ரீதியாக ஒவ்வாமையின் காரணமாக IL-4 சைட்டோகைன் மற்றும் IL-4 RECEPTOR-க்கும் இடையில் தொடர்பு என்று அவர் கூறினார்.IL-4 சைட்டோகைன் மற்றும் IL-4 RECEPTOR-க்கும் இடையிலான பிணைப்பை உடைக்கும் மருந்தை உருவாக்கினால், ஒவ்வாமைக்கு சிகிச்சை அளிக்க முடியும் என்பது ஆராய்ச்சியின் மூலம் தெரியவந்துள்ளது. ஒரு சுவாரசியமான விஷயத்தைக் குறிப்பிட்ட அவர், ஜெர்மன் விஞ்ஞானிகள் ஹோமியோபதி மூலம் ஒவ்வாமைக்கு சிகிச்சை கண்டறிந்துள்ளதாகவும், ஹோமியோபதி மிகவும் பயனுள்ளதாக இருப்பதாகவும், பதினைந்து நிமிடங்களில் மாற்றத்தை ஏற்படுத்திவிடும் என்றும் கூறினார்.

தமது விளக்கக்காட்சியின் போது, 'சுகாதாரக் கோட்பாடு' (Hygiene Hypothesis) பற்றி விளக்கிய அவர், நாம் எவ்வளவு சுத்தமான சூழலில் இருக்கிறோமோ, அவ்வளவு தூரம் நமது நோய் எதிர்ப்பு மண்டலம் பலவீனமடைகிறது என்றும், அழுக்கான சூழலில் வாழ்பவர்களின் நோய் எதிர்ப்பு மண்டலம் வலுவாக இருக்கிறது என்றும் கூறினார்.

'பேஜ் டிஸ்ப்ளே டெக்னாலஜி' (Phage Display Technology) உதவியுடன் இந்த பெப்டைட் அல்லது எதிர்ப்பாளரை (Antagonist) நாங்கள் பெற்றுள்ளோம் என்றும், இதனை ஒவ்வாமை உள்ளவர்களின் செல்களில் பரிசோதித்ததில், அல்லாஹ்வின் அருளால் 1GE ஆன்டிபாடிகளைக் குறைப்பதில் பெரும் வெற்றி கிடைத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இதற்கு ஹுஸுர் அன்வர் அவர்கள், இது எல்லா வகையான ஒவ்வாமைக்கும் சிகிச்சையா? என்று வினவினார்கள். அதற்கு அவர், இது குறித்து இன்னும் மேலதிக ஆராய்ச்சிகள் நடைபெற்று வருவதாகக் கூறினார். கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுடன் ஹுஸுர் அன்வர் அவர்களின் இந்த வகுப்பு சுமார் 45 நிமிடங்கள் நடைபெற்றது.

**கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவிகளுக்கு ஹுஸுர் அன்வர் அவர்கள் நடத்திய வகுப்பு**

நிகழ்ச்சிநிரலின்படி, கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவிகளுக்கான ஹுஸுர் அன்வர் அவர்களின் வகுப்பு தொடங்கியது. நிகழ்ச்சி திருக்குர்ஆன் திலாவத்துடன் தொடங்கியது, அதை நூருல் அய்ன் தாஹிர் அவர்கள் ஓதினார். மேலும் அதன் தமிழ் மொழிபெயர்ப்பை ஃபாயிஸா மஹ்மூத் என்பவரும் மற்றும் ஆங்கில மொழிபெயர்ப்பை மரியம் ஹனானே என்பவரும் வழங்கினர். அதன்பிறகு, சிந்து ஹைதர் புகியோ என்பவர் 'ஆய்வக மருத்துவம் மற்றும் தொழில்முறை பயிற்சி' (Laboratory Medicine and Professional Practice) என்ற தலைப்பில் விளக்கக்காட்சியை வழங்கினார்.

அவர் இது தொடர்பான தனது 40 வார அனுபவத்தைப் பற்றி எடுத்துரைத்தார். இந்த நாற்பது வாரங்களில் முதல் முப்பது வாரங்கள் மெல்போர்னில் உள்ள மோனாஷ் மருத்துவ மையத்தில் பணியாற்றி இருந்தார். **(தொடரும்...)**

அறிக்கை தயாரிப்பு: அப்துல் மாஜித் தாஹிர் ஸாஹிப், அடிஷனல் வகீலுத் தப்ஷீர் லண்டன், (அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல், நவம்பர் 29,2013) தமிழாக்கம்

முரப்பி

A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * * * * *

**மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா பாரதத்தின் காணாமல் போன ரஷீது புக் தொடர்பான முக்கிய அறிவிப்பு**

இந்திய ஜமாஅத் உறுப்பினர்களின் கவனத்திற்கு அறிவிக்கப்படுவது என்னவென்றால், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா பாரதத்தின் கீழ்க் கண்ட Serial Numbers -களைக் கொண்ட 213 எண்ணிக்கையிலான பழைய ரசீது புத்தகங்கள் கிடைக்காததன் காரணத்தால் ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஒப்புதலுடன் நீக்கப்படுகின்றன. எனவே குறிப்பிடப்படும் ரசீது புத்தகங்களில் குத்தாம் அல்லது அத்ஃபால் சந்தா கொடுக்காதீர்கள். மேலும் இந்த Serial Numbers - களைக் கொண்ட ரசீது புத்தகங்களின் கீழ் யாராவது ரசீது கொடுத்திருந்தால் பின்னர் அந்த ரசீதுடைய நகலுடன் மஜ்லிஜ் குத்தாமுல் அஹ்மதிய்யா பாரதத்தின் அலுவலகத்திற்கு தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

(ஸத்ர் குத்தாமுல் அஹ்மதிய்யா பாரத்)
காணாமல் போன ரசீது புத்தங்களின் விவரங்கள் கீழ் வருமாறு:

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2081 | 2155 | 2231 | 2275 | 2364 | 2465 | 2539 | 2572 | 2637 | 2699 | 2740 | 2817 |
| 2088 | 2157 | 2232 | 2276 | 2378 | 2466 | 2540 | 2573 | 2638 | 2700 | 2743 | 2861 |
| 2089 | 2159 | 2233 | 2289 | 2383 | 2471 | 2543 | 2577 | 2639 | 2705 | 2744 | 2867 |
| 2095 | 2160 | 2234 | 2290 | 2394 | 2472 | 2544 | 2584 | 2640 | 2706 | 2745 | 2868 |
| 2096 | 2161 | 2236 | 2292 | 2426 | 2473 | 2545 | 2585 | 2641 | 2707 | 2748 | 2903 |
| 2097 | 2169 | 2237 | 2295 | 2427 | 2474 | 2547 | 2586 | 2653 | 2708 | 2753 | 2905 |
| 2104 | 2170 | 2238 | 2297 | 2428 | 2476 | 2550 | 2587 | 2658 | 2709 | 2754 | 2907 |
| 2105 | 2172 | 2239 | 2298 | 2429 | 2477 | 2551 | 2588 | 2671 | 2710 | 2758 | 2928 |
| 2121 | 2180 | 2240 | 2300 | 2430 | 2481 | 2552 | 2589 | 2688 | 2711 | 2759 | 2933 |
| 2125 | 2201 | 2243 | 2306 | 2446 | 2482 | 2553 | 2590 | 2689 | 2713 | 2760 | 2940 |
| 2127 | 2202 | 2246 | 2325 | 2447 | 2484 | 2554 | 2599 | 2690 | 2728 | 2761 | 2947 |
| 2132 | 2206 | 2247 | 2327 | 2449 | 2485 | 2555 | 2600 | 2691 | 2733 | 2786 | 2949 |
| 2137 | 2211 | 2248 | 2330 | 2450 | 2486 | 2556 | 2621 | 2692 | 2734 | 2792 | 2950 |
| 2141 | 2213 | 2249 | 2331 | 2453 | 2490 | 2557 | 2623 | 2693 | 2735 | 2793 | 2952 |
| 2148 | 2221 | 2250 | 2334 | 2454 | 2532 | 2558 | 2628 | 2695 | 2736 | 2794 | 2989 |
| 2150 | 2222 | 2257 | 2335 | 2458 | 2536 | 2559 | 2634 | 2696 | 2737 | 2796 | |
| 2152 | 2223 | 2273 | 2336 | 2460 | 2537 | 2570 | 2635 | 2697 | 2738 | 2797 | |
| 2154 | 2228 | 2274 | 2337 | 2464 | 2538 | 2571 | 2636 | 2698 | 2739 | 2815 | |

**பத்ர் வார இதழ்களைப் பாதுகாத்தல்**

இந்த இதழ் உலகியல் அசுத்தங்களிலிருந்து விலகிய, மார்க்க மற்றும் உலகியல் அறிவுகளின் களஞ்சியமாகத் திகழ்கிறது. இது சமுதாயத் தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்கிறது.

பத்ர் வார இதழில் திருக்குர்ஆன் வசனங்கள், ஹதீஸ்கள் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் பொன்மொழிகள் மற்றும் எழுத்துக்கள் மட்டுமின்றி நூற்றுக்கணக்கான சான்றுகள் இடம்பெறுகின்றன. இவற்றைப் படிப்பது, மற்றவர்களுக்குக் கொண்டு சேர்ப்பது, அவற்றின்படி செயல்படுவது மற்றும் இவற்றின் மூலம் பிள்ளைகளுக்கு கல்வி மற்றும் மார்க்கப் பயிற்சி வழங்குவது நம் அனைவரின் கடமையாகும். இந்த நோக்கங்களை அடைவதற்கு, 'அல்-ஃபஸ்ல்' இதழ்களைப் பாதுகாப்பதும், அவற்றை முறையாகப் பராமரிப்பதும் நமது முக்கியப் பொறுப்பாகும்.

மார்க்கக் கல்வி மற்றும் தர்பிய்த்தை உள்ளடக்கிய விஷயங்க கட்டுரைகளை மதிப்பது ஜமாஅத் உறுப்பினர்களின் பொறுப்பாகும். இதை மற்ற பத்திரிகைகளுடன் விற்பனை செய்வது அதன் கௌரவத்தை அவமதிப்பதற்குச் சமமாகும். இதைப் பாதுகாப்பது சாத்தியமில்லை என்றால், புனிதமான எழுத்துக்கள் அவமதிக்கப்படாமல் இருக்கவும். எந்தவொரு குற்றச்சாட்டுக்கும் இடமளிக்காத வகையிலும் மிக கவனமாக அவற்றை அழித்துவிடவும். சமூகத்தைச் சேர்ந்த அன்பிற்குரியவர்கள் இந்த விஷயத்தில் சிறப்பு கவனம் செலுத்துவார்கள் என்றும், மேலும் இதிலிருந்து முழுமையாகப் பயனடைந்தவாறு இந்த விஷயங்களை கருத்தில் கொள்வார்கள் என்றும் நம்புகிறோம்.(நிர்வாகம்)

**2 - ம் பக்கத் தொடர்ச்சி (தலையங்கம் ).......**

فَبِاَيِّ حديثٍ بعد الله و اٰياته يُومنون

அல்லாஹ்வின் வசனங்களுக்குப் பிறகு எந்த ஹதீஸை இவர்கள் நம்பப் போகிறார்கள்?'.

மறுபுறம், இவருடைய எதிர் தரப்பு மவ்லவி அப்துல்லாஹ் சக்டால்வி ஸாஹிப் ஹதீஸ்களை முற்றிலுமாக நிராகரிக்கக் கூடிய வரம்பு மீறுதலின் வழியில் அடியெடுத்து வைத்துள்ளார். ஹதீஸ்களை நிராகரிப்பது என்பது ஒருவகையில் திருக்குர்ஆனை நிராகரிப்பது ஆகும். ஏனெனில் அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்: .

قُلْ ان كنتم تحبون الله فاتبعوني يُحْبِبْكُمُ الله

அல்லாஹ்வை நேசிப்பீர்களானால் என்னைப் பின்பற்றுங்கள்' -

எனவே, அல்லாஹ்வின் மீதான அன்பு என்பது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீதான அன்பைச் சார்ந்துள்ளது. மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் செயல் முன்மாதிரிகளை அறிந்து கொண்டு அதனை பின்பற்றுவதற்கு ஹதீஸ்களும் ஒரு வழிமுறையாகும். எனவே, யார் ஹதீஸை விட்டுவிடுகிறாரோ, அவர் அந்தப் பின்பற்றும் வழியையும் விட்டுவிடுகிறார்.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள், முஹத்திஸ்கள் (ஹதீஸ் கலை அறிஞர்கள்) மற்றும் அவர்களின் சீடர்களின் வழிமுறையிலிருந்து விலகி, ஹதீஸை எடைபோடுவதற்கான வழிமுறையாக இதனைக் கூறியுள்ளார்கள். அதாவது. அதன்படி, எந்த ஹதீஸ் திருக்குர்ஆனிற்கு ஏற்புடையதாக இருக்குமோ, அது எவ்வளவுதான் பலவீனமானதாக இருந்தாலும் சரியே அது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். அதேநேரம் ஒரு ஹதீஸ் எவ்வளவு நம்பகமானதாகவும் அல்லது தொடர்ச்சியானதாகவும் இருந்தாலும் சரியே அது திருக்குர்ஆனின் தெளிவான போதனைக்கு முரணாக இருந்தால், முதலில் அதன் விளக்கத்தைப் பற்றி சிந்திக்க வேண்டும். ஆனால், அவ்வாறு அதன் பின்னரும் எவ்வகையிலும் சந்தேகம் அகலவில்லையென்றால் அத்தகைய ஹதீஸை கைவிட வேண்டும். ஏனெனில், அது கண்ணியத்திற்குரிய இறைத் தூதர் (ஸல்) அவர்களின் தரப்பிலிருந்து வந்திருக்க முடியாது.

மேலும், அன்னார் (அலை) கூறினார்கள்:

'ஒரு முன்னறிவிப்பை உள்ளடக்கிய ஒரு ஹதீஸ் இருந்து, அது முஹத்தீஸ்களின் பார்வையில் பலவீனமானதாக இருந்தாலும், ஒரு காலத்தில் அந்த முன்னறிவிப்பு உண்மையாகிவிட்டால், பின்னர் அந்த ஹதீஸையும் உண்மையானதாகக் கருதுங்கள். அத்தகைய முஹத்திஸ்கள் மற்றும் அறிவிப்பாளர்கள் தவறிழைத்துள்ளனர் என்று கருதுங்கள். மேலும் எவர்கள் அந்த ஹதீஸை பலவீனமானது அல்லது புனையப்பட்டது என்று கூறியுள்ளார்களோ அவர்களை பொய்யர் என்று கருதுங்கள். இத்தகைய நூற்றுக்கணக்கான ஹதீஸ்கள் உள்ளன, அவற்றில் முன்னறிவிப்புகளும் இருக்கின்றன. அவற்றில் பெரும்பாலானவை முஹத்திஸ்கள் பார்வையில் விமர்சனத்திற்குரியதாகவோ அல்லது பலவீனமானதாகவோ அல்லது புனையப்பட்டதாகவோ உள்ளன.

எனவே, அவற்றில் ஒரு ஹதீஸ் நிறைவேறிவிட்டால், அதை 'இது பலவீனமானது அல்லது புனையப்பட்டது' என்று கூறி புறக்கணிக்காதீர்கள். அவ்வாறு செய்தால், அது உங்களின் ஈமானற்ற நிலையாக இருக்கும். ஏனெனில், அந்த ஹதீஸின் உண்மைத்துவத்தை இறைவனே வெளிப்படுத்தி இருக்கின்றான்; அதனை நீங்கள் மறுக்கின்றீர்கள் என்பதே அதன் பொருள். (சுருக்கமான வாசகம் - கிஷ்தீ நூஹ்)

எனவே, ஹதீஸை எடைபோடுகின்ற வழிமுறைகள் தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் எடுத்துரைத்துள்ள வழிமுறை இவையாகும். அன்னார் (அலை) இந்தக் காலகட்டத்தில் இறைவன் புறமிருந்து நீதிநெறி தீர்ப்பவர் என்ற முறையில் வருகை தந்துள்ளார்கள். அன்னாரால் முன்வைக்கப்பட்ட அந்த அனைத்து இறைத் தீர்ப்புகளை ஏற்றுக் கொண்டே நாம் இஸ்லாத்தின் உறுதிக்கும், நிலைத்தன்மைக்கும் உத்தரவாதமாக இருக்க முடியும். எனவே, ஹதீஸ்களை எடைபோடுவது மற்றும் அவற்றின்படி அமல் செய்வது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் மேற்கண்ட இந்த வழிகாட்டுதலின்படி அமல் செய்யப்பட வேண்டும்.

தமிழாக்கம்
முரப்பி
A.அப்துர் ரஹ்மான் தாஹிர்

***** ******

திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வின் நினைவிலேயே
உள்ளங்கள் அமைதி அடைகின்றன
(13:29)

A. Khaleel Ahmad
( Melapalayam)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பொன்மொழிகள்......**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

பெரும் துன்பங்கள் வருமென்றும் பல ஆபத்துகள் பூமியில் இறங்குமென்றும் அவற்றில் சில என் வாழ்நாளிலும் மற்றும் சில எனது மறைவுக்கு பிறகும் வெளிப்படுமென்றும் அவன் இந்த இயக்கத்திற்கு முழுமையான முன்னேற்றத்தை வழங்குவானென்றும் அவற்றில் சில எனது கரங்களாலும் மற்றும் சில நான் மறைந்த பிறகும் நிறைவேறும் என்றும் இறையறிவிப்புகள் எனக்குத் தெரிவிக்கின்றன.

இது இறைவனின் நடைமுறையாகும். அவன் மனிதனை பூமியில் படைத்த நாளிலிருந்தே எப்போதும் இந்த நடைமுறையை வெளிப்படுத்தி வந்துள்ளான்.

நிச்சயமாக நானும் எனது தூதரும் வெற்றி பெற்றே தீருவோம். (58:22) என அல்லாஹ் எழுதி வைத்துள்ளான் என்று அவன் கூறியதற்கிணங்க அவன் தனது நபிமார்களுக்கும் தூதர்களுக்கும் உதவி செய்கிறான்; அவர்களுக்கு வெற்றியை வழங்குகின்றான். இங்கு வெற்றி என்பதன் கருத்து, எவ்வாறு நபிமார்களும், தூதர்களும் விரும்பினார்களோ அவ்வாறே இறைவனின் உண்மையான அடையாளம் பூமியில் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதும் அதனை எவரும் எதிர்த்து நிற்க முடியாமலாக வேண்டும் என்பதும் ஆகும். எனவே இறைவன் வல்லமை மிக்க அடையாளங்களுடன் அவர்களது உண்மையை வெளிப்படுத்துகிறான். மேலும், எந்த நேர்வழியை அவர்கள் உலகில் பரப்ப விரும்புகின்றார்களோ அதற்கான விதையை அவர்களது கைகளாலேயே அவன் விதைத்து விடுகின்றான். ஆனால், அவர்களது கைகளால் அதனை முழுமையாக நிறைவு செய்ய அவன் வைப்பதில்லை. மாறாக, வெளிப்படையில் தோல்வி என்னும் அச்சத்தை தன்னுள் கொண்டுள்ள ஒரு நேரத்தில் அவர்களுக்கு மரணத்தைக் கொடுத்து, எதிரிகளுக்கு எள்ளி நகையாடவும் பழிச்சொற்களையும் அவதூறுகளையும் கூறுவதற்கு சந்தர்ப்பத்தைக் கொடுத்து விடுகின்றான். அவர்கள் எள்ளி நகையாடி, பரிகாசம் செய்த பிறகு மீண்டும் தனது வல்லமையின் மற்றொரு கையை காட்டுகின்றான். அதன் மூலம் ஓரளவுக்கு முழுமை பெறாமல் இருந்த அந்த நோக்கங்கள் அதன் முழுமையான நிறைவை எட்டிவிடுவதற்கான சூழ்நிலைகளை உருவாக்கி விடுகிறான். சுருக்கமாக, இறைவன் இருவிதமான வல்லமையை வெளிப்படுத்துகின்றான்.

முதலாவதாக, நபிமார்களின் கைகளாலேயே தனது வல்லமையின் கரத்தை காட்டுகின்றான். இரண்டாவதாக, ஒரு நபி மரணிக்கின்ற சமயத்தில் அந்த நபியின் மரணத்திற்கு பின்னர் அவரை பின்பற்றுபவர்கள் துன்பங்களை எதிரிடும் நிலை உருவாகின்றது. எதிரிகள் வலுப்பெற்று இப்போது பணி சீர்குலைந்து விட்டது என கருதுகின்றனர். இந்த ஜமாஅத் இனி அழிந்து விடும் என அவர்கள் உறுதியாக நம்புகின்றனர். ஜமாஅத்திலுள்ள மக்களும் சந்தேகத்தில் வீழ்ந்து விடுகின்றனர். அவர்களது இடுப்புகள் முறிந்து விடுகின்றன. (அல் வஸிய்யத் நூல்: பக்கம் 10)

***** ******

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2026-2028 Vol. 11 THU 25 JUNE 2026 Issue No. 26

ACT. MANAGER
_ATHAR AHMAD SHAMIM
Mobile : +91 9815639670
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

## ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்களின் ஆஸ்திரேலிய சுற்றுப் பயணம் - 2013

### 13 அக்டோபர் 2013, ஞாயிற்றுக்கிழமை

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் காலை 5:35 மணிக்கு மெல்போர்னில் உள்ள அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தலைமையகத்திற்கு வருகை தந்து ஃபஜ்ர் தொழுகையை நடத்தினார்கள். தொழுகையை நிறைவேற்றிய பிறகு, ஹுஸூர் அன்வர் அவர்கள் தமது தங்குமிடத்திற்குத் திரும்பிச் சென்றார்கள். காலை நேரத்தில், ஹுஸூர் அன்வர் அவர்கள் அலுவலக தபால்களையும், அறிக்கைகளையும் மற்றும் வெளிநாடுகளில் இருந்து வரக் கூடிய ஃபேக்ஸ்கள் மற்றும் அறிக்கைகளைப் படித்து, அது குறித்த வழிகாட்டல்களை வழங்கினார்கள்.

### தனிப்பட்ட சந்திப்புகள்

நிகழ்ச்சி நிரலின்படி காலை 11 மணிக்கு ஹுஸூர் அன்வர் அவர்கள் தமது அலுவலகத்திற்கு வருகை தந்தார்கள். மேலும், குடும்பத்தினருடனான சந்திப்புகள் தொடங்கின. இன்றைய காலை அமர்வில் 54 குடும்பங்களைச் சேர்ந்த 270 உறுப்பினர்கள் தங்களின் அன்பிற்குரிய தலைவரைச் சந்திக்கும் நற்பேறு பெற்றனர். இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட குடும்பங்கள் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் விக்டோரியா மாகாணத்தைச் சார்ந்தவையாகும். அனைவரும் தங்களின் அன்புக்குரிய தலைவருடன் புகைப்படம் எடுத்துக் கொள்ளும் நற்பேறைப் பெற்றனர். ஹுஸூர் அன்வர் அவர்கள் கல்வி பயின்று வரும் மாணவ, மாணவிகளுக்குப் பேனாக்களை வழங்கினார்கள். மேலும், சிறுவர்களுக்கும், சிறுமிகளுக்கும் சாக்லேட்டுகளை வழங்கினார்கள்.

இன்றைய சந்திப்பிலும் அஹ்மதி உயிர்தியாகிகளின் குடும்பத்தினரும், இறை வழியில் சிறை சென்றவர்களின் குடும்பத்தினரும் இடம் பெற்றிருந்தனர். தங்களின் அன்பிற்குரிய தலைவரைச் சந்தித்தது அனைவருக்கும் அளவற்ற மகிழ்ச்சியையும், மன அமைதியையும் அளித்தது. ஒவ்வொருவரும் அன்னாரது அன்பையும், முடிவில்லாத துஆக்களையும் பெற்றுக்கொண்டனர். இந்தச் சந்திப்பு நிகழ்ச்சி மதியம் 2:25 மணி வரை நீடித்தது. அதன் பிறகு, ஹுஸூர் அன்வர் அவர்கள் பள்ளிவாசலுக்கு வருகை தந்து ஆமீன் விழாவை நடத்தினார்கள்.

### ஆமீன் விழா

ஹுஸூர் அன்வர் அவர்கள் பின்வரும் சிறுவர்கள் மற்றும் சிறுமிகளை திருக்குர்ஆனிலிருந்து ஒரு வசனத்தை ஓதும்படி கூறி, பின்னர் இறுதியில் துஆ செய்தார்கள்.

சிறுவர்களில்: முஹம்மது ஹுீத் அஹ்மது, வலீத் அஹ்மது, ஸமத் சந்து, ஜாஸிப் அஹ்மது காலித், நுஃமான் அஹ்மது, ஜீஷான் காலித், ஹாரிஸ் ஜியா, ஜர்ஹாம் ராஃபி, அத்தாவுல்-கரீம் மற்றும் ஃபாரிஸ் அஹ்மது காலித் ஆகியோர் அடங்குவர்.

சிறுமிகளில்: அர்ஸலா இப்ராஹிம் ஆப்பிள், அயிஷா உமர், அரீபா அஹ்மது, மஹம் கதீர், ஃபைஸா அஹ்மது, ஃபரீஹா அஹ்மது, கஷ்மலா ஷாபாஸ், அதிபா காயூத், ஃபாத்திமா உஸ்மான், பாஸ்மா வரத், அமாதுல் முசவ்வர் காலித் மற்றும் பாஷீர் தாலாப்பூர் ஆகியோர் அடங்குவர்.

ஆமீன் விழாவிற்குப் பிறகு, ஹுஸூர் அன்வர் அவர்கள் லுஹர் மற்றும் அஸ்ர் தொழுகைகளை ஜமஅ செய்து தொழுகை நடத்தினார்கள். தொழுகைக்குப் பிறகு, ஹுஸூர் அன்வர் அவர்கள் தமது தங்குமிடத்திற்குத் திரும்பினார்கள்.

### கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்காக ஹுஸூர் அன்வர் அவர்கள் நடத்திய வகுப்பு

பிற்பகல் 2:30 மணிக்கு ஹுஸூர் அன்வர் அவர்கள் பள்ளிவாசல் ஹாலிற்கு வருகை தந்தார்கள். மேலும், அங்கு நிகழ்ச்சி நிரலுக்கேற்ப கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான வகுப்பை ஹுஸூர் அன்வர் அவர்கள் நடத்தினார்கள். நிகழ்ச்சி அன்ஸார் ஷரீப் என்பவரின் திருக்குர்ஆன் திலாவத்துடன் தொடங்கியது. அதன் ஆங்கில மொழிபெயர்ப்பை ரஹீம் அஹ்மது வழங்கினார்.

இதன் பிறகு, முஹம்மது ஹமித் அஹ்மது 'Realistic Spin Guides' (யதார்த்தமான சுழல் வழிகாட்டிகள்) என்ற தலைப்பில் தனது Presentation-ஐ வழங்கினார்.

இதன் பிறகு, முஹம்மது ஹமித் அஹ்மது 'Realistic Spin Guides' (யதார்த்தமான சுழல் வழிகாட்டிகள்) என்ற தலைப்பில் தனது Presentation-ஐ வழங்கினார்.

அவர் 'Magnon சங்கிலி பரிமாற்றம்' என்ற தலைப்பில் தனது ஆராய்ச்சியை முன்வைக்கையில், Magnon சங்கிலி குவாண்டம் அலகாகும் என்று கூறினார். காந்தச் சங்கிலியில் காந்தத் திறனை (Potential) செலுத்தினால், அந்தத் துகளை நாம் கட்டுப்படுத்தலாம் என்றும், அந்தத் திறனை மாற்றியமைப்பதன் மூலம் Magnon-ஐ மாற்றலாம் என்றும் கூறினார். இவ்வாறு நாம் இதனை தொலை தொடர்புக்கான வழிமுறையாக்கிக் கொள்ள முடியும்.

இதன் பிறகு, அஸீஸ் அவர்கள் Identification and Characterisation of a Novel Cytokine IL-4 Receptor Antagonist For Allergy Treatment என்ற தலைப்பில் தனது விளக்கக் காட்சியை வழங்கினார்.

இதன் தொடர்ச்சி 10- ம் பக்கம்..

National Watch Company
Sales & Service

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
O.A.N. Doors & Steels
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, ( opp. Karuna Clinic ) Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad